பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 09 செவ்வாய்க்கிழமை 26.09.2023 கதிர் 319

# தியாகி திலீபனின் நினைவு இன்று உணர்வெழுச்சியுடன்

## நல்லூரில் நடக்க ஏற்பாடு

தியாக தீபம் திலீபனின் 36ஆவது நினைவு நாள் இன்று நல்லூரில் பேரெழுச்சியுடன் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. தாயகம் மற்றும் புலம்பெயர் தேசங்கள் எங்கும் பல இடங்களிலும் உணர்வெழுச்சியுடன் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் சூழ்நிலையில் 5 அம்சக் கோரிக்கையை இந்திய அரசிடம் முன்வைத்து பார்த்தீபன் எனப்படும் திலீபன் பட்டினிப் போராட்டத்தைத் தொடங்கினார். அப்போது அவருக்கு வயது 24.

உணவு, தண்ணீர் ஏதுமின்றி திலீபன் தொடங்கிய இந்தப் பட்டினிப் போராட்டத்தை இந்திய மற்றும் இலங்கை அரசுகள் உதாசீனம் செய்ததன் காரணமாக, 12ஆவது நாள் திலீபனின் உயிர் பிரிந்தது. ☞ 2

## இது ரகசியம் அல்ல!

நல்லூரின் பின்புறம் சிவப்பு மஞ்சள் கொடிகளுடன் எழுச்சி பெற்றுள்ளது. அந்த இடத்தைக் கடக்கும் எவரும் திலீபனை மனதிலிருந்தாமல் கடக்க முடியவில்லை. வரலாறு தெரிந்தவர்கள் அவனை நினைந்துருகவும், வரலாற்றைத் தெரிந்துகொள்ளாதவர்கள் இது ஏன் என்கிற வகையில் அதனைத் தெரிந்துகொள்ளும் உந்துதலைத் தரவும் அந்தக் காட்சிகள் தவறவில்லை.

அதேநேரம், தியாகி திலீபனின் நினைவேந்தல் காலங்களில் இலங்கைப் படைத்துறையினர் மற்றும் பொலிஸாரால் ஏற்படக்கூடிய பதற்றம் அளவிற்கு, நிகழ்வை ஏற்பாடு செய்பவர்களின் உள்மோதல்கள் எப்போது திலீபனையும் போராட்டத்தையும் ☞ 2

## இரு வயோதிப அகதிகள் தமிழ்நாட்டில் தஞ்சம்

(ந.லோகதயாளன்.)

இலங்கையில் இருந்து இரு முதியவர்கள் நேற்று அதிகாலை தமிழ்நாட்டில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இலங்கையின் வவுனியா மற்றும் மன்னாரைச் சேர்ந்த இருவரை ஏற்றிச் சென்ற படகு தமிழகம் தனுஸ்கோடி கரையில் இருவரையும் இறக்கி விட்டுள்ளது. 58 மற்றும் 60 வயதை உயுடையவர்களே இவ்வாறு தமிழகத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

தமிரகம் சென்ற ☞ 8

## ஜனாதிபதியின் அமெ. பயணத்தால் நாட்டுக்கு நன்மைகள் கிட்டுமாம்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அமெரிக்கவிஜயத்தினால் நாட்டுக்கு பல நன்மை ஏற்படுமென காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜயவர்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

அமெரிக்காவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தொடரில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பங்கேற்றதன் பின்னர், அங்கு வெற்றிகரமாக இடம்பெற்ற கலந்துரையாடல்களைத் தொடர்ந்து நாட்டுக்கு பல சாதகமான முடிவுகள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கு, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் உலக வங்கியின் தலைவர் அஜய் பங்காவுக்கும் இடையில் நியூயோர்க்கில் ☞ 2

## சீதாவக்க ராஜசிங்க மன்னின் வரலாற்று மீளாய்வு அவசியம்

### ஜனாதிபதி ரணில் வலியுறுத்து

துணிச்சலும் தேசப்பற்றும் மிக்க சீதாவக்க ராஜசிங்க மன்னனின் வாழ்க்கை குறித்து மீள் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

12,000 பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் மற்றும் சீருடைகள் வழங்கும் நிகழ்வு நேற்று முற்பகல் ஹங்வெல்ல ராஜசிங்க மத்திய கல்லூரியில் நடைபெற்றது. 'சீதாவக்க - சிசு அருணலு' நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சுமார் ☞ 8

### தமிழீழ விடுதலைப் புலிகளின்

## தங்கம், பணம் தேடி முல்லையில் வேட்டை



விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்ட ஆயுதங்கள் தங்க நகைகள் இருப்பதாக தெரிவித்து முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதியில் நேற்று நிலத்தைத் தோண்டித் தேடும் பணி முன்னெடுக்கப்பட்டது. முல்லைத்தீவு நீதிவான் தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் இந்த அகழ்வுப் பணி இடம்பெற்றது.

பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய நீதிமன்ற அனுமதியை பெற்று நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் அகழ்வுப் பணி தொடங்கியது.

பொலிஸார், விஷேட அதிரடிபடையினர், ☞ 8

## தபால் ஊழியர் சங்கத்தினர் கொழும்பில் போராட்டம்

அதிகரித்த வாழ்க்கைச் செலவுகளுக்கு ஏற்ப ஊதியம் அதிகரிக்கப்படாமை, வெற்றிடங்களுக்கான நியமனங்கள் செய்யப்படாமை, இடமாற்றங்கள் உரிய வகையில் நடைபெறாமை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாடு முழுவதும் தபால் ஊழியர் தொழிற்சங்கத்தினர் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

தபால் ஊழியர்களின் ஒன்றிணைந்த சங்கங்கள் ☞ 2

## இலங்கை - சீனா இரு நாடுகளுமே ஒன்றையொன்று நம்பும் நாடுகள்

### சீனத் தூதுவர் பெருமிதம்

இலங்கையும் சீனாவும் எப்போதும் ஒருவரையொருவர் நம்பும் மதிக்கும் சிறந்த அயல்நாடுகளாக காணப்படுகின்றன. ஒருவரிலிருந்து மற்றையவர் நன்மை பெறும் சிறந்த நண்பர்களாகவும் ஒருவருக்கு ஒருவர் உதவும் சிறந்த நண்பர்களாகவும் காணப்பட்டனர் என்று இலங்கைக்கான சீன தூதுவர் ஹீசென்ஹொங் தெரிவித்தார்.

12,000 பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை ☞ 8

## பலம் வாய்ந்த தலைவராக ரணிலை உலகம் ஏற்கிறதாம்

உலகின் பலம்வாய்ந்த தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் மினுவாங்கொட தொகுதி அமைப்பாளர் பேராசிரியர் ஆசு மாரசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலார் சந்திப்பின்பேதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு ☞ 8

## தொழில்சார் அமைப்புகளைத் திரட்ட புதிதாகச் சிந்திக்க வேண்டியுள்ளது

### மனுஷவின் நூல் வெளியீட்டில் ஜனாதிபதி ரணில் கருத்து

மாற்றத்துடன் தொழில் சார் அமைப்புக்களை எவ்வாறு ஒன்று திரட்ட முடியும் என்பது தொடர்பில் புதிதாக சிந்திக்க வேண்டியுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவினால் எழுதப்பட்ட திரைட் ஐ (The Right Eye) எனும் புலனாய்வு நூல் வெளியீட்டு விழா நேற்று கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் ☞ 8

## அரசுக்கு எதிராக கைகோர்க்க தயார் என பல்கலை மாணவர் ஒன்றியம் அறிவிப்பு

அரசின் அடக்குமுறைக்கு எதிராக ஏனைய தரப்பினருடன் கைகோர்ப்பதற்கு தயாராக உள்ளதாக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டார் மதுஷான் சந்திரஜித் தெரிவித்துள்ளார்.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், இளம் ஊடகவியலாளர் சங்கம் உள்ளிட்ட தொழிற்சங்கத்தரப்பினருக்கு இடையிலான கலந்துரையாடலொன்று நேற்று கொழும்பில் நடைபெற்றது.

இதன்போது பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம், நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் ஆகியவற்றுக்கு எதிராக ஒன்றிணைந்து குரல் கொடுப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்போது கருத்து வெளியிட்ட அனைத்துப் பல்கலைக்கழகமாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டார் மதுஷான் சந்திரஜித தெரிவித்ததாவது:

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மற்றும் நிகழ்நிலை காப்பு சட்டம் ஆகியவற்றை அரசாங்கம் கொண்டு வருவதற்கான நோக்கம் அடக்குமுறையை பிரயோகிப்பதற்காகும். மக்களை தொடர்ச்சியாக அழுத்தத்திற்கு உள்ளாக்குகின்ற பொழுது மக்களிடமிருந்து எதிர்ப்புகள் நிச்சயமாக ஏற்படும் என்பதை அரசு அறிந்துள்ளது.

அந்தச் சந்தர்ப்பத்தில் மக்களை அடக்கி ஒடுக்குவதற்காகவே இவ்வாறான காட்டுச் சட்டங்களை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் முனைகின்றது. இதன் காரணமாகவே சமூக ஊடகங்கள் மற்றும் ஏனைய ஊடகங்களையும் அடக்குவதற்காக இலக்கு வைத்த நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத் ☞ 8

### ஆசிய – பசுபிக் பிராந்திய

## சுகாதார அமைச்சர்கள் மாநாடு கொழும்பில்

பிராந்தியத்தின் சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கான ஆசிய - பசுபிக் பிராந்திய அமைச்சர்கள் மற்றும் சுற்றாடல் அதிகாரிகளின் ஐந்தாவது கலந்துரையாடல் ஒக்டோபர் 03 - 06 திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளதென சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட் தெரிவித்தார்.

அதன் பிரதான அமர்வு ஒக்டோபர் 05 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ளதோடு, ஐ.நா சுற்றாடல் நிகழ்ச்சி நிரல் மற்றும் சுற்றாடல் அமைச்சு இணைந்து ஏற்பாடு செய்யவுள்ள குறித்த நிகழ்வில் பிராந்தியத்தின் ☞ 8

## இனி இது .....

கேவலப்படுத்திவிடுமோ என்கிற பதற்றமும் சேர்ந்தே வந்துவிடுகின்றது.

மிகக் கேவலகமாக திலீபனை நினைந்துருகும் உரிமைக்காக அடிபட்ட கறைபடிந்த வரலாற்றை ஏற்படுத்தியிருக்கின்றோம் என்பதே இந்தப் பதற்றத்திற்குக் காரணம். இந்த ஆண்டும் அந்தப் பதற்றம் முற்றிலும் விலகியதாகத் தெரியவில்லை. எதிரெதிரே இரு நினைவிடங்கள் அமைந்திருக்கின்றன. ஒன்று திலீபனின் நினைவுத்தூபி அமைந்த இடம். அதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் வழக்கம் போல இறுதிநாள் நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளில் நேற்று மும்முரமாக இருந்தனர். எதிர்ப்புறத்தில் முன்னணியில் இருந்து பிரிந்து இன்று தமிழ் மக்கள் கூட்டணியில் முன்னாள்முதலமைச்சர்விக்னேஸ்வரனுடன்சேர்ந்திருப்பவர்கள் அமைத்த - குறிப்பாக யாழ். மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் வரதராஜா பார்த்திபன் - ஏற்பாட்டில் அமைக்கப்பட்ட திலீபன் ஆவணக் காப்பகத்தைச் சுற்றியும் இறுதிநாள் நிகழ்வுகளுக்கான தயார்ப்படுத்தல்கள் நேற்றுத் தீவிரமாக இருந்தன.

திலீபனதும், விடுதலைப் போராட்டத்தினதும் வரலாற்றைக் கடத்தும் முயற்சியில் இந்த இரு தரப்பினர் மட்டும் அல்லர், ஆங்காங்கேதிலீபன் நினைவுஊர்த்திகளைதயார்ப்படுத்திமக்கள்மத்தியில்பவனிவரஆவனசெய்துள்ளபலரும் ஈடுபட்டிருக்கின்றார்கள். அவர்கன் அனைவரும் தமது வரலாற்றுப் பணியில் இணைந்திருக்கும் அதே நேரம், அந்தப் பணி புனிதமானது என்பதையும் நினைவில் கொண்டிருப்பது அவசியமாகின்றது.

திலீபனின் நினவவு நிகழ்வுகள் மற்றும் மாவீர் தினக் கொண்டாட்டங்கள் அனைத்தையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி - அதிலும்குறிப்பாகசெல்வராசா கஜேந்திரன் அணியினர் - உரிமை கொண்டாட முற்படுகின்றார்கள் என்கிற குற்றச்சாட்டு பல தரப்புகளிடமிருந்தும் ஒலிக்கின்றது. அந்த முனைப்பில் ஏனைய கட்சிகள் பெரும்பாலும் ஒதுங்கியிருக்கவும் தலைப்பட்டுள்ளதை கடந்த சில வருடங்களில் பார்க்க முடிகின்றது. அது நல்லதுமல்ல.

திலீபன் ஒரு கட்சிக்கோ தரப்புக்கோ அமைப்புக்கோ சொந்தமானவனல்லன். அவன் ஒட்டுமொத்தத் தமிழ் இனத்திற்கும் சொந்தமானவன். எனவே அவனை நினைவிருத்திக்கொள்வதில் எல்லோருக்கும் அவரவர் பங்குபணிகளை ஆற்றுவதற்கு இடமளிப்பதுதான் மக்கள் மத்தியில் எழுச்சியை ஏற்படுத்தும் என்பதை எல்லோரும் மனதிலிருத்தி செயற்படுவது அவசியம்.

படையினர் மற்றும் பொலிஸார் மத்தியில் இத்தகைய நிகழ்வுகளைப் பார்த்து ஒரு ஏக்கமும்சீற்றமும்எப்போதும் உண்டு. நாட்டுக்காக உயிர் நீத்ததமதுதரப்பினரைஇப்படி நினைவில் கொள்ள மக்கள் முண்டியடிப்பதில்லைஎன்கிற ஏக்கமும், பயங்கரவாதிகள் என்று தம்மால் கொல்லப்பட்டவர்களை தாம் வெற்றி பெற்ற பின்னும் தம்முன்னேயே கொண்டாடுகிறார்களே என்ற சீற்றமும் எப்போதும் உண்டு. எனவே எப்படியாவது இந்த நிகழ்வுகளை முடக்கி, நிறுத்திவிட வேண்டும்என்பதில்அவர்கள் தீவிரமாக இருக்கிறார்கள். இருப்பார்கள். பிரிந்து நின்று தனித்தனியாகிஅவர்களுக்கு இரையாகிவிடாமல், திரண்டு நின்று அடம்பன் கொடியாகி நினைவு நிகழ்வுகளைப் பாதுகாப்பதே முக்கியமானது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தியாகி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1987 செப்டெம்பர் 15 தொடங்கியது திலீபனின் பட்டினிப்போராட்டம். அவரது நினைவாக ஒவ்வொரு ஆண்டும் அதே தினத்தில் நினைவு நிகழ்வகள் தொடங்கப்படுகின்றன. 12 தினங்கள் தொடரும் இந்த நிகழ்வுகள் அவரது ஆன்மாசாந்தியடைந்தஇறுதி நாளில்உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்படுகின்றன.

திலீபன் நினைவாக யாழ்ப்பாயம் நல்லூரில் அமைக்கப்பட்ட தூபி இடித்தழிக்கப்பட்டபோது. அது அமைந்திருந்த இடத்தில், அதன் எச்சசொச்சங்களை மையப்படுத்தி நினைவு நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. இறுதி நாள் நிகழ்வுகளும் அங்கேயே பெரும் எடுப்பில் மேற்கொள்ளப்படவுள்ளன.

## தபால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுத்த பிராதான போராட்டம்கொழும்பில்உள்ள தலைமை தபாலகத்திற்கு முன்னால் நேற்றையதினம் நடைபெற்றது.

இந்தப்போராட்டம் தொடர்பில் ஐக்கிய தபால் தொழிற்சங்கமுன்னணியின் ஏற்பாட்டாளர் சிந்தக்க பண்டார தெரிவித்ததாவது:

5200 பேர் பணிபுரிய வேண்டிய இடத்தில் 1700 பேரே பணிபுரிக்கின்றார்கள். இவ்வாறான நிலையில் இந்த பொதுச்சேவையை தொடர்ந்தும் நடத்திச் செல்ல முடியாது.

அரசு பலவருடங்களாக ஊழியர்களுக்குஎவ்விதமான கொடுப்பனவுகளையும் வழங்கவில்லை. ஆகவே பாரிய பொருளாதார நெருக்கடிகளை சந்திக்கின்ற ஊழியர்களுக்கு 20ஆயிரம் ரூபா வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகளை வழங்க வேண்டும்.

பதவி உயிர்வு, இடமாற்றம் உள்ளிட்ட நிர்வாக விடயங்களை கண்டுகொள்ளாது அரசியல்வாதிகள் தொடர்ந்தும் மௌனத்துடன் செயற்படுகின்றார்கள். ஆகவே அரசாங்கம் பதிலளிக்க வேண்டியது கட்டாயமாகும் - என்றார்.

## ஜனாதிபதியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள ஐக்கிய நாடுகள் சபையின்தலைமையகத்தில் சந்திப்பொன்றுஇடம்பெற்றது.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் முன்னெடுக்கப்படும் பொருளாதார மற்றும் சமூக மறுசீரமைப்பு வேலைத் திட்டங்களை வெகுவாகப் பாராட்டிய உலக வங்கியின் தலைவர் அஜய் பங்கா இலங்கையின் புத்தாக்க பாதைக்கான பிரவேசம் மகிழ்ச்சியளிப்பதாகவும்தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளுமாறுஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விடுத்த அழைப்பைஉலகவங்கியின் தலைவர் ஏற்றுக்கொண்டார்.

இதன்போதுதென்கொரிய ஜனாதிபதி யூன் சுக் யெயோலை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சந்தித்தோடு, இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் ஜனாதிபதியின் செயற்திட்டத்திற்கு தான் ஆதரவளிப்பதாக தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக் யெயோல் தெரிவித்தார்.

மேலும், இலங்கைக்கு தற்பொழுது தென்கொரியா வழங்கி வரும் தொழில் வாய்ப்புகளை அதிகரிக்க எதிர்பார்ப்பதாகவும் எதிர்காலத்தில் இலங்கை இளைஞர் யுவதிகளுக்கு தென்கொரியாவில் பல புதிய தொழில் வாய்ப்புகள் உருவாக்க எதிர்பார்க்கப்படுவதாகவும் தென்கொரிய ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

நியூயோர்க் நகரில் நடைபெற்ற கடல்சார் நாடுகளுக்கான 3 ஆவது இந்து - பசுபிக் தீவு நாடுகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டு உரையாற்றுகையில், இந்து-பசுபிக் பிராந்தியத்தில் பெரும் வல்லரசுப் போட்டி நிலவிய போதிலும், இந்து சமுத்திரம் மற்றும் தென் பசுபிக்சமுத்திரதீவுநாடுகளின் சுதந்திரம், அவற்றின் உள்ளக விவகாரங்களில் தலையிடாமை மற்றும் அவர்களின் தனிப்பட்ட உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பிராந்தியத்தின் அனைத்து நாடுகளும் அர்ப்பணிக்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கோரியிருந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் இந்தப் பயணமானது இலங்கைக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்த உதவியது. இதன்போது, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவை சந்தித்ததுடன், தெற்காசிய பிராந்தியத்தின் நாடுகளாக,இருநாடுகளுக்கும் இடையிலானஒத்துழைப்பை விரிவுபடுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தைஇருநாட்டு தலைவர்களும் விரிவாக கலந்துரையாடியதுடன்,கடந்த சவாலான காலகட்டத்தில் இலங்கைக்கு பங்களாதேஷ் வழங்கிய அசைக்க முடியாத ஆதரவிற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பிரதமர் ஷேக் ஹசீனா மற்றும் பங்களாதேஷ் மக்களுக்கும் தனது நன்றியைத் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நியூயோர்க்கில் உள்ள ஐ.நா சபையின் இணைக் காரியாலயத்தில் ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர்நிறுவனத்தின்பிரதானி சமந்தா பவரை சந்தித்தார். சர்வதேசநாணயநிதியத்தின் வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் பற்றி சுருக்கமான விளக்கமளித்த ஜனாதிபதி, அதனை வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்கு அரசாங்கத்தின் அர்ப்பணிப்பையும்எடுத்துரைத்தார்.

இந்தபயணத்தின்போது, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும்நேபாள பிரதமர் புஷ்ப கமல் தஹாலுக்கும் இடையிலான சந்திப்பொன்று ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை கூட்டத்தொடருக்கு இணையாக நியூயோர்க் நகரில் இடம்பெற்றது. இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால அரசியல், பொருளாதார மற்றும் வர்த்தகஉறவுகளைமேலும் மேம்படுத்துவது குறித்து இதன்போது இரு நாட்டுத் தலைவர்களும்நீண்டநேரம் கலந்துரையாடினர்.

இலங்கைக்கும் நேபாளத்துக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் எதிர்காலத்தில் வலுவாக முன்னேறும்எனநம்பிக்கை தெரிவித்த நேபாள பிரதமர், இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை வலுப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் கருத்துத் தெரிவித்தார்.

இதன்போது, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஈரான் ஜனாதிபதி கலாநிதி செய்யித் இப்ராஹிம் ரைசியையும் சந்தித்ததுடன் (Seyyed Ebrahim Raisi), இலங்கைமற்றும் ஈரானுக்கு இடையிலான நீண்ட கால உறவுகள் மற்றும் பல வருடங்களாக ஒருவருக்கு ஒருவர் வழங்கிய ஒத்துழைப்புக்களை நினைவுகூர்ந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இலங்கை பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்திருந்தகாலப்பகுதியில் ஈரான் வழங்கிய ஒத்துழைப்புக்கும் நன்றி தெரிவித்தார்.

2030ஆம்ஆண்டுக்குள் மின்சார உற்பத்தியில் 70சதவீத புதுப்பிக்கத்தக்க வலுசக்தியின் ஊடாகப் பெறுவதற்கும் , வனப் பரப்பை 32 சதவீதமாக அதிகரிக்கவும், பசுமை வாயு வெளியேற்றத்தை 14.5சதவீதமாக குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், 2040இல்நிலக்கரிப் பயன்பாட்டைப்படிப்படியாகக் குறைத்து, 2050 இல் காபன் நிகர பூச்சியத்தை அடைய எதிர்பார்த்துள்ளதாகவும், நியூயோர்க்கில்உள்ளஐக்கிய நாடுகளின்தலைமையகத்தில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் கூட்டத்தொடரில்

தொடர்ச்சி 8 ம் பக்கம்...

# "பயங்கரமான சட்டமூலங்கள்"

அரசு அறிமுகப்படுத்தியுள்ள பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம்மற்றும்நிகழ்நிலைகாப்புச் சட்டம் ஆகியன பொதுமக்களின் உரிமைகள் பறிக்கும்பயங்கரமான சட்டமூலங்கள் என்று சுதந்திர மக்கள் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நாவலவில் உள்ள சுதந்திர மக்கள் காங்கிரஸின் பிரதான அலுவலகத்தல் நேற்றுச்செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலானஅரசாங்கம்பொதுமக்களின் எதிர்ப்புகளை அடக்குவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது.

அதிலொன்றாகவே அரசாங்கம் பல்வேறு அடக்குமுறைச் சட்டங்களை அமுல்படுத்துவதற்கு முனைகின்றது.

உத்தேசபயங்கரவாதஎதிர்ப்புச்சட்டமூலம் மற்றும் நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலத்தின் ஊடாக அடக்குமுறையே பிரதான நோக்கமாக உள்ளது.

விசேடமாகநிகழ்நிலைகாப்புசட்டமூலத்தின் ஊடாகஸ்தாபிக்கப்படவுள்ளஆணைக்குழுவின் 5 உறுப்பினர்களை ஜனாதிபதி நியமிப்பார். இதனால், அவர்கள் அரசியலமைப்பு பேரவைக்கு பொறுப்புக்கூற மாட்டார்கள். அவர்களுக்கு தேவையான அதிகாரத்தினை நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியே வழங்குகின்றார்.

அரசாங்கம் கொண்டு வந்துள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் மற்றும் நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் என்பன நிறைவேற்றப்பட்டால், அரசியல், பொருளாதார. சமூக ரீதியான பல பிரச்சினைகளை எதிர்நோக்குவதற்கு நேரிடும்.

இந்த இரண்டு சட்டமூலங்களும் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்ட பின்னர், அவற்றை உயர் நீதின்றத்தில் சவாலுக்கு உட்படுத்த எதிர்க்கட்சிகள் தயாராக உள்ளன. அதற்கான கலந்துரையாடல்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் விரைவில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் –என்றார்.

### நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிப்பதில்

# இந்த வாரம் மிக முக்கியமானது நிதி இராஜாங்க அமைச்சர் கருத்து

நீடிக்கப்பட்ட கடன்வசதியின் முதலாவது கட்ட கொடுப்பனவு தொடர்பில் ஆராய்வதற்காக இலங்கைக்கு வருகை தந்த சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்திக்கவுள்ளனர்.

இந்நிலையில், இந்த வாரமும், அடுத்த வாரமும் நாட்டின் எதிர்காலத்தினை தீர்மானிக்கின்ற முக்கியமான காலப்பகுதியென்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில்கலந்துகொண்டுஉரையாற்றி அவர் மேலும் கூறுகையில், சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இலங்கைக்கு வந்து மீளாய்வினை நடத்தி வருகின்றார்கள். அந்தவகையில் இந்த வாரமும், அடுத்த வாரமும் மிகவும் முக்கியமானதாகின்றது.

குறிப்பாக, நீடிக்கப்பட்ட கடன்வசதியைப் பெறுவதற்காக எட்டப்பட்ட உடன்பாடுகள் தொடர்பாக அவர்கள் ஆய்வினைச் செய்துவருகின்றார்கள். முதலாவதுதவணைக் கொடுப்பனவுக்கான உடன்பாடுகளை நிறைவேற்றுவதுமிகவும்கடினமானபணியாகும்.

அதன் பின்னரே அவர்களின் இரண்டாவது தவணைக்கான கொடுப்பனவு கிடைக்கவுள்ளது. அதனையடுத்து, பலதரப்பு நிதி நிறுவனங்களின் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொண்டு அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதனையடுத்து அடுத்தாண்டுமுதல்நீடித்த பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதற்காக முதலீட்டாளர்களை நாட்டுக்குள் கொண்டுவரவேண்டியுள்ளது. அவர்களுக்கான நம்பிக்கை நாம் உறுதியாக கட்டியெழுப்ப வேண்டும். இந்தச் செயற்பாடுகள் ஊடாகவே நீண்டகாலஅபிவிருத்தியை நோக்கியபயணம் முன்னெடுக்கப்படும் –என்றார்.

### வன்முறையைத் தூண்டும்

# அரசியல்வாதிகள் தொடர்பில் மத்திய வங்கி ஆளுநர் சீற்றம்

தவாறான தீர்மானங்களை எடுத்த நிதியமைச்சின் அதிகாரிகள், இலங்கை மத்திய வங்கியின் அதிகாரிகளின் வீடுகளுக்கு தீ வையுங்கள். அரசியல்வாதிகளான தங்களின் வீடுகளுக்கு தீ வைக்காதீர்கள் என்று கூறி வன்முறையைத் தூண்டும் அரசியல்வாதிகள் குறித்து மக்கள் உரிய தீர்மானத்தை எடுக்கவேண்டும் என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி.நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஊடகவியலாளர் நுவான் கணேவத்த எழுதிய 'பொருளாதாரக் கொலை' என்ற நூலினை வெளியிட்டு வைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிதாகவொரு கருத்து வெளியிடப்பட்டு பரப்பப்படுகிறது நிதி அமைச்சும் மத்திய வங்கியும் அரசமைப்பினை மீறியுள்ளதாக இந்த கருத்து உருவாக்கப்பட்டு இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வாறன கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுவதை நான் எதிர்க்கவில்லை.

அக்கருத்திற்கு அமைவாக, நிதி அமைச்சும், இலங்கை மத்தியவங்கியும் அரசமைப்பை மீறும் வகையில் செயற்பட்டிருந்தால் அது தொடர்பாக உரிய விசாரணைகளை நடத்துவதற்கும்,நீதிமன்றத்தினைநாடுவதற்கும் நான் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு தயாராக உள்ளேன்.

குறிப்பாக, நிதியமைச்சின் பொறுப்பில் இருந்த அரசியல்வாதிகள், அதிகாரிகள், மத்தியவங்கியின் அதிகாரிகள் உள்ளிட்டவர்களுக்கு எதிராக பாரபட்சமின்றி நடவடிக்கைகளை கட்டங்கட்டமாக முன்னெடுப்பதற்கு நான் என்னால் இயலுமான ஒத்துழைப்புக்களை அளிப்பேன் என்றும் உறுதியாக தெரிவிக்கின்றேன்.

ஆனால், இந்தக்கருத்துக்களுடன்தற்போது அரசியல்வாதிகளால் சற்றே வித்தியாசமான கருத்துக்களையும் வெளிப்படுத்துகிறார்கள். அதாவது தவறான தீர்மானங்களை எடுத்த நிதியமைச்சின் அதிகாரிகள், இலங்கை மத்திய வங்கியின் அதிகாரிகளின் வீடுகளுக்கு தீ வையுங்கள். அரசியல்வாதிகளான தங்களின் வீடுகளுக்கு தீ வைக்காதீர்கள் என்று கூறப்படுகின்றது.

இதன் மூலம் மக்கள் பிரதிநிதிகள் உள்நாட்டில் வன்முறை கலாசாரத்தினை தூண்டிவிடுவதற்கு முயற்சிக்கின்றார்களா என்ற கேள்வி எழுகின்றது. ஏற்கனவே மக்கள் போராட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. அதில் வன்முறைகளின்றிய நிலைமைகள் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஆகவே வன்முறையை தூண்டும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு, பரப்பிவரும் அரசியல்வாதிகள் தொடர்பாக மக்கள் உரிய தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# சர்வதேச கிரிக்கெட் மைதானத்தை யாழில் அமைக்க விரும்புகின்றேன்

## சந்தோஷ் நாராயணன் மகிழ்ச்சிச் செய்தி




'யாழ்ப்பாணத்தில் சர்வதேசதர கிரிக்கெட் மைதானத்தை உருவாக்கும் எண்ணம் தனக்கு உண்டு' என பிரபல தென்னிந்திய இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த சந்தோஷ் நாராயணன், தனியார் விருந்தினர் விடுதியில் ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கலந்துறையாடிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 21ஆம் திகதி பெரும் இசைநிகழ்ச்சியை நடத்தவுள்ளேன். துவண்டு போய் உள்ள மக்களுக்கு உற்சாகம் தரும் வகையில் இந்த இசை நிகழ்வு இருக்கும் என நம்புகிறேன்.

இந்த இசை நிகழ்வு முற்றிலும் இலவசமானது. அனைத்து தரப்பு மக்களும் ஒன்றிணையும் நிகழ்வாக இருக்கும். அடுத்து வரும் நாள்களின் நிகழ்வு தொடர்பில் அறிவிப்புக்கள் தொடர்ந்து வரும்.

புலம்பெயர் நாடுகளில் உள்ள இசைத்துறை சார்ந்தவர்களையும், எனது குழுவையும் ஒன்றிணைத்து யாழ்ப்பாணத்தில் நடத்தும் இந்த இசை நிகழ்வும் இலங்கை தாண்டி வெளிநாடுகளில் உள்ளவர்களின் கவனத்தையும் ஈர்க்கும் என்ற நம்பிக்கை உண்டு.' இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)

# சர்வதேசம் ஏற்றுக்கொள்ளும் விசாரணைகள் அவசியமாம்

## ஹர்ஷ கூறுகிறார்




ஈஸ்டர் தாக்குதல் விடயத்தில் எதிர்க்கட்சியினரின் கொள்கையிலேயே நாட்டின் பெரும்பான்மையான மக்களும் இருக்கின்றார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டிசில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

'உயிர்த்த ஞாயிறு தொடர்பான உண்மைகளை அறிந்துக் கொள்வதில் ஆளும் கட்சிக்கு இருக்கும் கொள்கைகளுக்கும் எதிர்க்கட்சிக்கு இருக்கும் கொள்கைகளுக்கும் இடையில் வித்தியாசம் காணப்படுகின்றது.

எதிர்க்கட்சியின் கொள்கையிலேயே இந்த நாட்டில் அதிகமானோர் இருக்கின்றார்கள். அது தான் இந்த உண்மைகளை எப்படியாவது கண்டுபிடிக்க வேண்டும் என்பது.

இந்தத் தாக்குதலால் சுமார் 15 நாடுகளின் பிரஜைகள் உயிரிழந்திருக்கின்றார்கள். ஆகவே, சர்வதேசத்தால் ஏற்றுக் கொள்ளக்கூடிய அனைவருக்கும் சாதாரணமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

எதிர்க்கட்சியினர் இராணுவத்தினருக்கு சேறு பூச நினைக்கின்றார்கள் என்று பலரும் கூறுகின்றார்கள்.

அவ்வாறு எதுவும் இல்லை. கடந்த பல வருடங்களாக நாடாளுமன்றத்தில் சரத் பொன்சேகாவுக்கு அருகில் தான் அமர்கின்றேன்.

தனிப்பட்ட ரீதியிலும் அவர் எனக்கு பல விடயங்களைக் கூறியிருக்கின்றார். வருடக் கணக்காக இடம்பெற்ற யுத்தத்தில் போராடி முடிவுக்கு கொண்டு வந்த இராணுவத்தினரை குறை சொல்வதற்கு எங்களிடம் ஒன்றும் இல்லை.

ஆனாலும் சில நபர்கள் குறித்து சில கேள்விகள் எழுந்துள்ளன. ஆகவே இது தொடர்பில் தேடிப் பார்ப்பதற்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாரிய தேவை ஒன்று இருக்கின்றது' என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# விற்பனை நிலையங்களில் அசம்பாவிதங்கள் நடந்தால் உடன் பொலிஸாருக்கு அறிவிக்குக

## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ அறிவுறுத்து

பல்பொருள் அங்காடிகள் உள்ளிட்ட சில்லறை விற்பனை நிலையங்களில் திருட்டு சம்பவம் அல்லது ஏதேனும் சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெற்றால் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

பொருள்களைத் திருடிய குற்றத்திற்காக சட்டத்திற்கு மாறாக எவரையும் தாக்க முடியாது. உங்கள் நிறுவனத்தில் ஏதேனும் பொருள்கள் திருடப்படுவதைக் கண்டால், உங்களிடம் பாதுகாப்புப் பணியாளர்கள் உள்ளனர், குறிப்பாக அது ஒரு பல்பொருள் அங்காடியாக இருந்தால், அந்த நபரைக் கட்டுப்படுத்தி, பொலிஸாருக்குத் தெரிவிக்கவும்.

ஆனால் தாக்குதலுக்கு மாற்று வழி இல்லை. அதை அங்கீகரிக்கவே முடியாது. தாக்குதல் நடந்தால், அந்த நிறுவனத்தில் பணிபுரிபவர்கள் சந்தேகநபர்களாகக் கைது செய்யப்படுவார்கள்.

அவர்களுக்கு எதிராக சட்டம் அமுல்படுத்தப்படும். இவ்வாறான நிறுவனங்களின் முகாமையாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் இது தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நிறுவனத்தில் யாராவது தவறு செய்தால், பாதுகாப்புப் படையினர் மூலம் ஓரளவு கட்டுப்படுத்தி, பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

## திலீபன் நினைவாக மரக்கன்றுகள்

தியாக தீபம் திலீபனின் 36 ஆவது நினைவேந்தலை முன்னிட்டு யாழ் பல்கலைக்கழக மாணவர்களால் திலீபனின் நினைவுத்தூபி அமைந்துள்ள பகுதிகளில் நேற்று (திங்கட்கிழமை) பொதுமக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கிவைக்கப்பட்டன. (05)

# வாகன வருமான அனுமதிப்பத்திர சேவைகள் திடீர் இடைநிறுத்தம்

## மேல் மாகாணத்தில்

மேல் மாகாணத்தில் வாகன வருமான அனுமதிப்பத்திரங்கள் வழங்குவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என போக்குவரத்து அமைச்சின் செயலாளர் கே.சி.என்.பெரேரா தெரிவித்துள்ளார்.

கணினி முறைமையின் புதுப்பிப்பு காரணமாக அந்த நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி செப்ரெம்பர் 27 முதல் ஒக்ரோபர் 02 வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்படும் என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)



# அஞ்சல் பணியாளர்கள் மன்னாரில் போராட்டம்

கொழும்பில் ஒருங்கிணைந்த தபால் சங்கம் ஏற்பாடு செய்த தொழிற்சங்க போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் மன்னார் அஞ்சல் பணியாளர்களால் நேற்று (திங்கட்கிழமை) கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மன்னார் அஞ்சலகத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் சம்பள முரண்பாடு தீர்த்தல், வாழ்க்கைச் செலவாக 20,000 ரூபாவாக உயர்த்தல், பதவி உயர்வை வழங்கல், வெற்றிடங்களை நிரப்புதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் போராட்டக்காரர்களால் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# பெருமளவான போதைப்பொருள் விமான நிலையத்தில் மாட்டியது

30 கோடி ரூபா பெறுமதியான கொக்கைன் போதைப்பொருள்களை, கட்டுநாயக்க விமான நிலையத்தின் சுங்கப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.



34 வயதுடைய கென்ய நாட்டு பிரஜையொருவராலேயே இந்தப் போதைப்பொருள் நாட்டுக்குள் கடத்திவரப்பட்டுள்ளது.

30 கோடி ரூபா பெறுமதியான கொக்கைன் போதைப்பொருள்கள், எத்தியோப்பியாவிலிருந்து நாட்டுக்கு கடத்திவரப்பட்ட நிலையில், கட்டுநாயக்க விமான நிலையத்தின் சுங்கப் பிரிவினர் அவற்றைக் கைப்பறியுள்ளனர்.

இந்த போதைப்பொருள்களை நாட்டுக்குள் கடத்திய 34 வயதுடைய கென்ய நாட்டுப் பிரஜையொருவரும் சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர், மோட்டார் வாகன வியாபாரியெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் எத்தியோப்பியாவின் அடிஸ்அபாபா நகரிலிருந்து, கட்டார் தலைநகர் டோஹாவிற்கு சென்று, அங்கிருந்து கட்டார் விமான சேவைக்கு சொந்தமான கியு.ஆர்.654 எனும் விமானத்திலேயே நாட்டுக்கு வருகை தந்துள்ளார்.

குறித்த நபர் தொடர்பாக சந்தேகம் கொண்டு, அவர் கொண்டுவந்தகைப்பையை பரிசோதனை செய்து பார்த்தபோது, 3 பிஸ்கட் டின்களின் சூட்சமமான முறையில் கடத்திவரப்பட்ட போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவை சுமார் 4 கிலோ எடைகொண்டது என்றும் 180 வில்லைகளில் இவை அடைத்துவரப்பட்டுள்ளன எனவும் சுங்கப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். குறித்த நபர் நாட்டுக்குள் வரும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# சுகாதார அமைச்சுக்கெதிராக இன்று பெரும் ஆர்ப்பாட்டம்

## தாதியர்கள் போர்க்கொடி

சுகாதார அமைச்சுக்கு எதிராக இன்று (செவ்வாய்க்கிழமை) பாரிய ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை தாதியர் சங்கம் தெரிவித்துள்ளது.

'தாதியர் பற்றாக்குறையால் வைத்தியசாலைகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்க்க நடவடிக்கை எடுக்காத அதிகாரி கள் தாதியர் அரசமைப்புத் திருத்தம் தொடர்பான வரைவை இரகசியமாகத் தயாரித்துள்ளதாகத்' தெரிவித்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியைக் கருத்திற்கொண்டு நாட்டின் சுகாதார அமைப்பில் காணப்படும் குறைபாடுகளைச் சரி செய்வதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகச் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## திலீபனின் நினைவுகளில் மூழ்கி...

பார்த்திபன் இராசையா நவம்பர் 27, 1963 ஊரெழு, யாழ்ப்பாணத்தில் பிறந்தான். செப்டெம்பர் 26, 1987 லெப்டினன் கேணல் திலீபன் என்ற பெயருடன் மறைந்தான். மறையும் வரை தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்தான். இந்திய அமைதிப் படையினரிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து காந்திய வழியில் நீரும் அருந்தாமல் பட்டினிப் போராட்டம் நடத்தினான். உலகிற்கு காந்தியைத் தந்த, அகிம்சையைப் போதித்த இந்தியா பார்த்திபனின் போராட்டத்தை மதிக்க மறுத்து உதாசீனப்படுத்தியதன் விளைவு அவன் உயிர் பிரிந்தது.

1987 செப்டெம்பர் 15ஆம் திகதி ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து திலீபன் தனது பட்டினிப் போராட்டத்தைத் தொடங்கினான். 1987ஆம் ஆண்டு செப்டெம்பர் 26 சனிக்கிழமை காலை 10.48 மணிக்கு லெப்டினன் கேணலாக நல்லூர் கோயில் முன்றலில் அவன் உயிர் பிரிந்தது. நல்லூரில் தன்னெழுச்சியாகத் திரண்டிருந்த பல்லாயிரம் மக்கள் கண்முன்னே, கதறியழுத சத்தத்தின் நடுவே திலீபனின் உயிர் பிரிந்தது என்கிற செய்தி பேரிடியாக விழுந்தது.

திலீபன் 5 அம்சக் கோரிக்கையை முன்வைத்திருந்தான். அவை ஒன்றும் மிகப் பெரும் கோரிக்கைகள் அல்ல. அமைதிக் காலத்தில் மோதலில் ஈடுபடும் இரு தரப்புக்களும் நல்லெண்ண நடவடிக்கைகளாக மேற்கொள்ளக்கூடிய சிறு கோரிக்கைகள்தான். எனினும் இலங்கை, இந்திய அரசுகள் அதனை உதாசீனம் செய்தன.

1. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறிலங்காவின் சிறைகளில் அல்லது தடுப்புகாவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும்.

2. புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் புதிதாகத் திட்டமிடப்படும் சிங்களக் குடியேற்றங்கள் யாவும் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

3. அவசர காலச் சட்டம் நீக்கப்படவேண்டும்.

4. வடக்கு கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

5. இந்திய அமைதிப்படைகளின் மேற்பார்வையின் கீழ் ஊர்காவல் படைகளின் ஆயுதங்கள் மீளப்பெறப்படல் வேண்டும்.

என்பனதான் திலீபனின் கோரிக்கைகளாக இருந்தன. இவற்றில் எவையும் இலங்கை – இந்திய அரசுகளுக்கு நிறைவேற்றவே முடியாத அல்லது நிறைவேற்றவே கூடாத கோரிக்கைகளாக இருக்கவில்லை என்றபோதும் அவை உதாசீனப்படுத்தப்பட்டன. ஒருவேளை அந்தக் கோரிக்கைகள் அன்று நிறைவேற்றப்பட்டிருந்தால் அதன்பின்னர் தீவிரமான இருதசாப்தகாலப்போரைத் தடுத்திருக்கக்கூடமுடிந்திருக்கும். ஆனால், யாரும் அது குறித்து அக்கறைப்படாததன் விளைவாக தலீபனை தமிழர்கள் இழக்கவேண்டியவர்களானார்கள்.

திலீபனின் கோரிக்கைகள் 35 ஆண்டுகள் கடந்தும் இன்றும் அப்படியேதான் இருக்கின்றன என்பது மிகப் பெரிய சோகம். அந்தக் கோரிக்கைகளில் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டாலும் அது பயங்கரவாதச் சட்டத்திற்குள் உள்ளீர்க்கப்பட்டு இன்றும் தொடர்கின்றது என்கிற நிலையில் அவனது அனைத்துக் கோரிக்கைகளும் அப்படியேதான் இருக்கின்றன என்பது துன்பியலே.

திலீபனின் நினைவுகளைத் திரட்டும் அதேநேரத்தில் அவனது வேணவாவான தமிழர்களுக்கு என்றொரு தீர்வுநோக்கிய பயணத்தைத் தமிழர்கள் கூர்மைப்படுத்த முயற்சிப்பதும் அதற்காக ஒற்றுமைப்படுவதும் அவசியம்.

# கற்பகதரு என்னும் அற்புதம்
# பயனளிக்கும் பனை மட்டை

அங்கம் – 15



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

கூரையானது.குடையானது. வேலியானது. விளைநிலத்திற்குப் பசளையும் ஆகியது பனை ஓலை.பல நிலைகளில் பயனாகியிருந்த பனை ஓலை -தன்னளவில் மட்டுமே நின்றுவிடாமல் - தன்னைத் தாங்கி நின்ற மட்டையினையும் காட்டி, அதனையும் எடுத்து உங்களுக்கு என்ன தேவையோ அதற்கு ஏற்றாற் போல பயன் படுத்திக் கொள்ளுங்கள் என்று சொல்லி - பனை மட்டையினை வழங்கிவிட்டு பனை ஓலை ஒதுங்கிக் கொண்டது.

பனை மட்டை என்றதும் அதனைச் சாதாரணமாக எண்ணி விடக் கூடாது. பனை என்றாலே பயன் என்பதுதான் அர்த்தமாகும்.அந்த நிலையில் பனை மட்டையும் அர்த்தம் பொதிந்ததாகத்தானே அமையும். பனையில் ஓலையினைத் தாங்கி இருப்பது பனை மட்டை. ஓலை வெட்டும் பொழுது ஓலையுடன் பனை மட்டையும் சேர்ந்தே வந்துவிடும். வீடு வேயவும் , பல பொருட்களைச் செய்யவும் பனை ஓலையினை வெட்டிய பின்னர் - பனை மட்டை மட்டும் தனியே விடப் பட்டிருக்கும்.தன்னுடன் இணைந்து வளர்ந்து இருந்து வந்த ஓலை - அதனை விட்டு விட்டுப் போய்விட்டதே என்னும் ஏக்கம் பனை மட்டைக்கு இருந்தாலும் அது - அதனைக் காட்டிக் கொள்ளாமல் தன்னால் என்ன முடியுமோ அதனைக் கொடுத்து ஆறுதல் அடைந்தே இருக்கும்.ஓலையி னின்றும் அகற்றப்பட்ட மட்டை-ஓலமிடுவதே யில்லை. உதவும் வரை உதவிக் கொண்டே இருக்கும். இதற்கும் காரணம் அது பனையினின்றும் வந்த ஒரு அங்கம் அல்லவா ! கொடுக்கும் குணத்தை நிறையவே கொண்டிருக்கும் பனையின் மட்டைக்கும் அந்தக் குணம் அமைந்துதானே இருக்கும்!

ஓலை நீக்கப்பட்ட பனை மட்டைகள் காயவிடப்பட்ட பின்னர் அவை வேலி அடைக்கப் பயன்படுத்தப்படுகிறது. வீட்டின் கூரைகளில் வரிச்சுகளாகவும் பனை மட்டை பயனாகி நிற்கிறது. பனை ஓலைக் கூரை வீடுகளில் - பனை மட்டையின் உபயோயகம் நிறையவே காணப்படும்.களி மண்ணைக்கொண்டு அரைக் குந்தாக அமைத்து - அதன் மேல், கருக்கு நீக்கிய பனை மட்டைகளை அளவாக வெட்டியெடுத்து - பனைமட்டைச் சுவர் அமைப்பது மிகவும் அழகாக இருக்கும். வீட்டில் பல இடங்களில் இப்படியான அமைப்பினைப் பார்த்தவர்களுக்கும், அப்படியான வீட்டில் வாழ்ந்தவர்களுக்கும் அதன் நிலை நன்றாகவே மனதில் பதிந்திருக்கும். பனை ஓலை கூரையாய் அமைய



அதனைத் தாங்கிய மட்டை -அந்தக் கூரையின் கீழ் குட்டிச் சுவராய் இருந்து தன்னுடன் இணைந்திருந்த பனை ஓலையினைப் பார்த்தபடியே இருக்கும். இரண்டுக்கும் இடையே எப்படி உறவும் நட்பும் தொடர்கிறது பாருங்கள் !

கிராமப் புறங்களிலே வீட்டில் மட்டுமல்ல - சனசமூக நிலையங்கள், வாசிகசாலைகள், என்பவற்றிலும் பனை மட்டையினாலாகிய அரைக்குந்து அடைப்பு அழகினைக் காணலாம். அங்கும் சுற்றிவர மண்ணினாலாகிய அரைக் குந்து இருக்கும். அந்த மண்சுவர் முக்கால் பங்காய் அல்லது அரைப் பங்காய் அமைந்திருக்கும். களிமண் சுவரின் மேற் பகுதியை மறைத்து சனசமூக நிலையங்களின், வாசிகசாலைகளின் பாதுகாப்புக் கவசமாய் கருக்குச் சீவப்பட்ட காய்ந்த பனை மட்டைகளே வந்து நிற்கும்,அந்தப் பனை மட்டைகளை அடுக் காக இணைப்பதே கண்ணுக்கு நல்ல காட்சியாய் அமைந்திருக்கும்.வாசிகசாலையின், சனசமூக நிலையத்தின் முன் பெரும்பாலும் அழகான வேம்பும் வளர்ந்திருக்கும். வாசிகசாலையின் உள்ளே அமர்ந்து பத்திரிகைகளை வாசிக்கும் பொழுது -பனை மட்டை யின் இடைவெளியினால் உள்ளே வரும் காத்து இதமாகவே இருக்கும். வேம்பில் பட்டுவரும் காற்று மேலும் வாசிக்கவே ஊக்கப் படுத்தும். பத்திரிகைகளை வாசிக்கும் வாசிகசாலைகள் பனை மட்டையினைக் கொண்டு அமைக்கப்பட்டது போன்று - மாணவர்கள் படிக்கும் பள்ளிக்கூட வகுப்பறைகளும் பனை மட்டையினால் அமைக்கப் பட்டிருந்தமையும் கருத்திருத்த வேண்டியதேயாகும்.தமிழ்நாட்டில் இவ்வாறான பனை மட்டை வகுப்பறைகளில் மாணவர்கள் படித்தார்கள் என்பதையும் அறிய முடிகிறது. பனை மட்டைகளைக் கொண்டுவீட்டுக்குபடலைஅமைக்கப்படுகிறது. வாசசிக சாலை, சனசமூக நிலையங்களின் கதவாயும் பனைமட்டைப் படலைகள் அமைந்தும் இருப்பதுண்டு. பனை மட்டை வேலி. அந்த வேலியில் வளவுக்கு உள்ளேவர - பனை மட்டைப் படலை! எல்லாமே பனை மயமாகவே இருந்த காலமும் இருந்திருக்கிறது. பனை மட்டையிலிருந்து உரித்து எடுக்க ப்படும் நாரே வேலி அடைக்கவும், படலை கட்டவும், வீடு வேயவு ம் ,கயிறாகப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. தென்னந்தும்பாலாகிய கயிற்றினைப் பயன்படுத்தாமமேலேயே - பனைமட்டை நாரினைக் கயிறாகப் பயன்படுத்தியதைக் கருத்திருத்த வேண்டும்.

பனை ஓலையினைப் பிடித்து வைத்திருக்கும் பனை மட்டையின் அடிப்பகுதி கவடுபோல் இருக்கும். இந்தப் பகுதிதான் பனையினை இறுக்கமாய் பிடித்திருக்கும் முக்கிய பகுதி யாகும். ஒலைகளும் மட்டைகளும் பனையுடன் இணைந்து இருப்பதற்கு உறுதுணையே இந்தக் கவடுபோன்ற பகுதிதான். இதற்குக் கங்குமட்டை என்றும், பத்தல் என்றும் பெயர் அமைந்திருக்கிறது.யாழ்ப்பா ணத்தில் கங்கு மட்டை என்பது இந்தியாவில் பத்தல் என்று பெயராய் மாறியிருக்கிறது.பெயர் மாறினாலும் அதன் பயன்பாட்டில் மட்டும் எந்தவித மாற்ற முமே இல்லை எனலாம்.

கற்பகதருவான பனையானது வளரும் பருவத்தில் வடலி என்று பெயர் பெறுகிறது. வடலியாய் இருக்கும் பொழுதே அதன் வள்ளல் தன்மை ஆரம்பமாகியே விடுவதைக் காணலாம்.நிலவடலி என்று பெயர் பெறுகின்ற ஆரம்பக் காலத்தில் அதன் ஓலைகள் மயிலின் தோகைபோன்று அழகாக இருக்கும். அந்த ஓலைகளை மட்டையுடன் எடுத்து அழகான விசிறிகள் செய்யப்படுகின் றன. ஓலையுடன் இளம் மட்டையின் இங்கே இணைவது குறிப்பிடத்தக்கதா கும்.அடுத்த படிமு- றையில் வடலியில் உள்ள மட்டைகளில் கருக்குப் பிடிக்க ஆரம்பிக்கிறது.வடலியானது வளர்ந்து வரும்பொழுது வரும் நிலையே கங்கு வடலிப்பருவம். கங்குப்பகுதிதான் மிகவும் முக்கியமானது. அந்தப்பகுதி சிறந்த மூலப் பொருளினை வழங்கு ம் பகுதியாய் அமைந்கிறது என்பதைக் கருத் திருத்தல் அவசியமாகும்.

கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள கிரா மவாசிகள் கங்கு மட்டைகளை வெட்டிக் காலுக்குச் செருப்பாக அணிந்து கொண்டார்களாம். மேல் வாருக்குப் பனை நார் அகணியைப்

(5ஆம் பக்கம் பார்க்க..)

# கற்பகதரு என்னும் அற்புதம்.....



(4ஆம் பக்கத் தொடர்ச்சி....)

பொருத்திக் கொண்டார்கள். இதை அணிந்து கொண்டு செல்லும்பொழுது காலுக்கு மிருதுவாக இருப்பதுடன் மிகவும் மென்மையாகவும் இருந்த தாம். அடிப்பகுதி அதிகமாகத் தேய்ந்துவிட்டால் வேறு இரண்டு கங்கு மட்டைகளை வெட்டிக் கால் செருப்புகளை செய்து கொள்வர். இவ்வாறு மட்டைச் செருப்பை அணிந்தவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் பாதை போடும் பணியில் ஈடுபட்டிருந்த பொழுது - ஓர் வெள்ளையர் அந்தச் பாதை வழியே சென்ற பொழுது-கிராம வாசிகள் அணிந்திருக்கும் கால் செருப்பைப் பார்த்து வியந்தார். இந்தச் செருப்பு - தோலுக்குப் பதிலாக எப்படி உதவுகிறது என்று கவனித்தார். மட்டைச் செருப்பைப் புரட்டிப் பார்க்கும்பொழுது செருப்பின் அடிப்ப குதி தேய்ந்து இருந்தது. ஆனால் இடையிலே உள்ள கம்பி போன்ற தும்பு தேயாமல் இருப்பதைக் கண்டுபிடித்தார். உடனே இந்தக் கம்பி போன்ற தும்பை இங்கிலாந்துக்கு அனுப்பினார். அங்கு ஆராய் ந்ததும் இது துடப்பம் (பிரஷ்) செய் வதற்குப் பொருத்தமான மூல ப்பொருள் என்று கண்டுபிடிக்கப்பட்டது. இந்தத் தும்பு வளைந்தாலும் தானே நிமிர்ந்து கொள்ளும் விறைப்புத் தன்மையும், நீர் பட்டாலும் பாதிக்கப்படாத குணமும், வெப்பம், மின்சாரம் போன்றவற்றால் பாதிக்கப்படாத பண்புகளும் விரைவில் தேயாத கடினமான உறுதித்தன்மை யும் பெற்றிருந்ததை அங்கு ஆராய்ந்தவர்கள் அறிந்து கொண்டார்கள் என்று அறியமுடிகிறது. கங்குமட்டையின் மகத்துவமும், அதிலிருந்து கிடைக்கும் தும்பின் மகத்துவமும் இங்கிலாந்துவரை செல்லும் அளவுக்கு இருந்திருக்கிறது என்பது பெருமையாய் இருக்கிறதல்லவா! கங்குமட்டைகளின் பொருளாராதார முக்கியத்துவம் என்ன தெரியுமா ? அதுதான் அதிலிருந்து எடுக்கப்படுகின்ற தும்பாகும் தென்னைமட்டையில்இருந்துதானே தும்பு எடுக்க ப்படுகிறது. அது என்ன பனந்தும்பு! ஆச்சரி யமாய் இருக்கிறதா ! ஆச்சரியம் அல்ல, உண்மைதான். பனந்தும்பானது மூன்று வகையில் இருக்கிறது. கறுப்பு, நடுத்தரம், வெள்ளை என்பன வாகும். வடலிப் பனைகளின் கங்குமட்டைகள் கறுப்புத் தும்பைத் தருகின் றன. முற்றிய பனைகளில் இருந்து கிடைக்கும் தும்பு வெள்ளை நிறமாய் இருக்கும். இடையி ல் இருப்பதுதான் நடுத்தரமாகும். இரும்புக் கம்பிபோல உறுதியாயும் உருண்டையாயும் இருக்கும். எளிதில் முறிந்து விடாது இரு க்கும். வளைந்து நிமிரும் தன்மை உடைய து. பளபளப்பாய் இருக்கும். வெப்பத்தாலோ, ஈரத்தாலோ பாதிக்கப்படாத தன்மை உள்ளது. இந்தக் கறுப்புப் பனந்தும்பில் மின்சாரங் கூடப் பாய்ந்துவிடாது. அதே வேளை கறையானோ செல்லோ இத்தும்பை அரிக்கவும் மாட்டாது என்பதும் கவனத்துக்குரிய தாகும். அதே வேளை அமிலத்தினாலோ, காரத்தினாலே இத்தும்பு பாதிப்புக்கு உட்பட மாட்டாது. வெள்ளைத் தும்பு வயது முற்றிய பனைகளின் கங்கு மட்டைகளில் இருந்துதான் கிடைக்கிறது. கறுப்புத்தும்பு போன்றதன்று. இது மிகவும் மென்மையாய் இருக்கும். கறுப்புத் தும்பின் வலிமை இதில் இருக் காது. இதன் எடையும் குறைவாகவே இருக்கும். இந்தத் தும்பில் சதைப் பற்று ஒட்டியபடியே இருக்கும். மிருதுவான தூரிகைவகைகள் செய்வதற்கு உகந்ததாய் அமையும். வெள்ளைத் தும்பில் ஐம்பத்து ஐந்து பகுதியும் கறுப்புத்தும்பில் நாற்பத்து ஐந்து பகுதிகளும் கொண்டதாய் அமைந் திருப்பதுதான் நடுத்தரத்தும்பாகும். வன்மையும், மென்மையும் கலந்த கலவையாய் இருப்பதுதான் இந்தத்தும்பின் சிறப்பு எனலாம்.

கங்குமட்டையினைச் சாதரணமாகவே நாங்கள் பார்ப்பது வழக்க மா கிவிட்டது கங்கு மட்டை என்றவுடன் அடுப்பெரிப்பதுதான் முன்வந்து நிற்கும். வென்னீர் வைக்க பெரும்பாலும் கங்குமட்டையினையே பயன்படுத்துவோம். கங்கு மட்டைகளை மழையில்லாக் காலங்களில் சேமித்து மழைக்காலங்களில் அடுப்புக்கு விறகாகப் பயன்படுத்தியதை பலரும் மறந்திருக்க மாட்டார்கள். பனந்தோப்புகள் நிறைந்த இடங்களில் வசிக்கும் மக்களில் பெரும்பாலோருக் குக் கங்குமட்டை என்றால் மிகவும் பெரியவிருப்பமாய் இருக்கும். ஏனென் றால் சமைக்கும் பணிக்குக் கைகொடுத்து நிற்கும் எரிபொருள் அதுதானே ! நகரத்தாருக்குக் கங்குமட்டைபற்றி அவ்வளவு தெரியமாட்டாது.

மடலில் இரண்டு கங்குமடைகள் அதாவது பத்தல் இருக்கும். ஒரு பத்தலின் நீளம் ஏறத்தாள பத்து அங்குலத்திலிருந்து இருபத்து ஆறு அங்குலம் வரை இருக்கும். ஒன்பது தொடக்கம் பத்து அங்குலம் வரையில் அகலம் அமைந்தி ருக்கும். இப்படி அமைந்திருக்கும் இந்த இரண்டு பத்தல்களிலிருந்தும் தும் பினை எடுத்துக் கொள்ளலாம். பத்தல் என்று அழை க்கப்படும் கங்கு மட்டை உட்பகுதி பளபளப்பாக மென்மையான தோல் போலக் காண ப்படும். மேற் பகுதி சற்றுக் கடினமான உறையினைக் கொண்டதாக இருக்கும். இந்த கங்கு மட்டையின் தும்பு நீளவாட்டில் படர்ந்திருக்கும். இந்தத் தும்பினது குறுக்கு வாட்டில் நுண்மையான தோல்போன்ற மென்மையான தும்பு அழுத்தமாய் பின்னப்பட்டிருக்கும். விஞ்ஞானப் பரிசோதனைக் கூடத்துக்குள் கூட்டி வந்து விட்டேன் என்று எண்ணுகிறீர்களா! கங்கு மட்டைக்குள் பொதிந்திருக்கும் இரகசியங்களைத்தான் தொட்டுக் காட்டுகிறேன். நெடுக்காயும் குறுக்காயும் காணப்படும் தும்புகள் உறுதியாகப் படிந்திருக்க சோறு என்னும் சதைப்பத்றுத் துணையாக பரவியே இருக்கும். இந்தச் சோறு உறுதியாகிவிட்டால் தும்பு எடுப்பதென்பது கடினமாகியே விடும். கங்குமட்டையானது காய்ந்தால் இந்த நிலை ஏற்பட்டுவிடும். அதனால் கங்குமட்டையானது காய்ந்து போவதற்கு முன்பாகவேதான் தும்பை எடுக்கப் பதமாய் இருக்கும் என்பது முக்கியமாகும். கங்குமட்டையின் அடிப்பகுதியில் இருக்கும் சோற்றுப் பகுதியானது ஈரப் பசையினையும் அதிகம் கொண்டே இருக்கும். பனையுடன் இணைந்திருக் கும் கங்குமட்டையின் நுனிப் பகுதி மெல்லியதாகவே காணப்படும். ஆனால் கங்குமட் டையின் அடிப்பகுயோ உறுதியானதாயும் திரட்சியானதாயும் இருக்கும் என்பது நோக்கத்தக்கது. கங்குமட்டையின் அடிப்பகுதியில் காணப்படும் தும்பினதும் கனம் சற்று அதிகமாய் அமைந்திருக்கும். ஆனால் நுனிப்பகுதியில் இருக்கும் தும்பானது கனவள வில் சற்றுக் குறைவாகவே அமைந்திருக்கும்.

பனந்தும்பினது உற்பத்தி பல காலங்களாய் இடம் பெற்று வருகிறது என்பது மனமிருத்த வேண்டியதாகும். ஆயிரத்து எண்ணூறாம் ஆண்டுக் காலத்திலேயே பனந்தும்பு எடுப்பது தொடங்கி விட்டது என்பதும் நோக்கத்தக்கது. கங்கு மட்டைகள் தான் பனந்தும்புக்கு அவசியம் என்பதால் - வடலிகளை மனம் போன போக்கில் வெட்டிப் பயன்படுத்தத் தொடங்கி ய காரணத்தால் - வடலிகளின் வளர்ச்சியில் தடையேற்படும் நிலை ஏற்படலாயி ற்று. இத னால் அக்காலத்தில் இருந்த அரசாங்கம் வடலிகளைக் கண்டபடி வெட்டுவதற்கே சட்டம் போட் டது என்பதும் கருத்திருத்த வேண்டியதே. அரசாங்கமே தலையிடும் அளவு க்கு பனந்தும்பு உற்பத்தி முக்கியத்துவம் பெற்றதாய் இருந்திரு க்கிறது என்பதும் நோக்கத்தக்க தேயாகும்.

இலங்கையில் வருடம் முழுவதும் கங்குமட்டை வெட்டுவது நடைபெற்றபடியேதான் இருக்கிறது. இந்தியாவில் இலங்கை போன்று கங்குமட்டை வெட்ட மாட் டார்கள்.

இரண்டு வருடத்துக்கு ஒரு முறைதான் இங்கு கங்கு மட்டை வெட்டப்படுகிறது. அதாவது மாசிமாதம் தொடக்கம் வைகாசிமாதம் வரையான காலப்பகுதி அல்லது சித்திரை மாதம் தொடக்கம் ஆவணி மாதம் வரையான காலப்பகுதியேயாகும். இப்படி வெட்டுவதனால் பனையின் வளர்ச்சியில் பாதிப்பு வருவதில்லை. (வளரும்)


# குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்


அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு வலுவடைவு

## அங்குள்ள இராணுவ கட்டளையதிகாரி உறுதி









கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு நிலைமை தற்போது வலுவடைந்து உயர்ந்த மட்டத்தில் உள்ளதாக கிழக்கு மாகாண இராணுவ கட்டளையதிகாரி மேஜர் ஜெனரல் பிரசன்ன குணரத்ன தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினர் பொது மக்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துவது மாத்திரமின்றி வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதையும் முதல் நோக்காகக் கொண்டு செயற்பட்டு வருவதாக அவர் மேலும் கூறினார்.

தொப்பிகல பகுதியை அண்மித்த ஈரளக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற விசேட வைபவமொன்றில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் இதனைக் குறிப்பிட்டார்.

தொப்பிகல இராணுவ கட்டளையதிகாரி சந்தன வன்னிநாயக்க தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின்போது பாடசாலை மாணவர்கள் 58 பேருக்கு கற்றல் உபகரணங்களும் 50 வறிய குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன.

23 ஆம் படைப்பிரிவு தலைமையதிகாரி மேஜர் ஜெனரல் கே.வி.என்.பீ. பிரேமரத்ன உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் பிரசன்னமாயிருந்தனர்.

கிழக்கு மாகாண இராணுவ கட்டளையதிகாரி மேஜர் ஜெனரல் பிரசன்ன குணரத்ன இங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

இலங்கை இராணுவப் படையினர் தற்பொது பொதுமக்களின் பாதுகாப்பை மட்டுமன்றி பொதுமக்களின் வாழ்வாதார மேம்பாடு மற்றும் இளைஞர்களின் விளையாட்டுத்துறையையும் மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தத் திட்டம் கிழக்கு மாகாணத்துக்கு மாத்திரமின்றி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள இடங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. - என்றார். (05)

# மன்னார் தேசிய மீலாத்துன் நபி விழா பின்போடப்பட்டது

## காதர் மஸ்தான் தெரிவிப்பு

தேசிய மீலாத்துன் நபி விழா எதிர்வரும் 28 ஆம் திகதி நடத்துவதற்கான ஏற்பாடாக இருந்தபோதும் அன்றைய தினம் ஜனாதிபதி நாட்டில் இருக்க மாட்டார் என்பதாலேயே இது பின்போடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி இதில் கட்டாயம் கலந்து கொள்ள இருப்பதால் அவர் திகதியைக் குறிப்பிட்ட பின்னர் நிகழ்வுத் திகதி குறித்து அறிவிக்கப்படும் என கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னாரில் தேசிய மீலாத்துன் நபி தின விழா இந்த வருடம் மன்னார் மாவட்டத்தில் முசலி செயலகப் பிரிவில் நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்ததுக்கு அமைவாக இதற்கான ஆயத்த முன்னேற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன.

இதுதொடர்பானமீளாய்வுக்கூட்டம் மன்னார்மாவட்டசெயலகத்தில்கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தானின் பங்கேற்போடு இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில் -

மன்னாரில்இந்தவிழாவைமிகவும் சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடாக இதன் ஏற்பாட்டுக் குழு மற்றும் இதன் சார்ந்ததிணைக்களஅதிகாரிகளுடனும் கலந்துரையாடியுள்ளோம்.

இதில் இது சம்பந்தமான கடந்த கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களில் இதன் செயற்பாடுகள் எவ்வாறு இருக்கின்றது என்பதை நாங்கள் ஆராய்ந்தோம்.

மாவட்ட மக்கள் மற்றும் திணைக்கள அதிகாரிகள் மிகவும் ஒத்துழைப்புடன் செயற்படுவதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றோம்.

இந்த மீலாத்துன் நபி விழா எதிர்வரும் 28 ஆம் திகதி நடத்துவதற்கான ஏற்பாடாக இருந்தபோதும் அன்றைய தினம் ஜனாதிபதி நாட்டில் இருக்க மாட்டார் என்பதாலேயே இது பிற்போடப்பட்டுள்ளது.

இவ்விழா எதிர்வரும் மாதம் (ஒக்ரோபர்) முதல் அல்லது இரண்டாவது கிழமையே நடத்துவதற்கு தற்பொழுது தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி இதில் கட்டாயம் கலந்துகொள்ள இருப்பதால் அவர் திகதியை குறிப்பிட்ட பின்னர் இது அறிவிக்கப்படும். - என்றார்.

நாட்டில் பொருளாதார கஷ்டம் இருக்கின்றபோதும் இவ்விழாவுக்காக 11.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதனால் பல அமைப்புக்கள் மற்றும் திணைக்களங்களினூடாக பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

இப்பகுதிமக்கள்நீண்டகாலமாகஎதிர்பார்த்துக்கொண்டிருந்தசிலாவத்துறை ரவுண்ட போட் அமைப்பதற்காக 84 மில்லியன் ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டு அதற்கான வேலைத் திட்டமும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக அமைச்சர் பந்துல்ல குணரெட்ண அவர்களுக்கு நாங்கள் நன்றியை தெரிவித்து நிற்கின்றோம்.

அத்துடன்விழாநடைபெறஇருக்கும் சிலாவத்துறை முஸ்லிம் வித்தியாலய பாடசாலை வீதி தற்பொழுது புனரமைக்கப்பட்டு வருகிறது.

மேலும் அரசு சார்பற்ற நிறுவனம் ஐ.எஸ்.ஆர்.சி 125 வீதிகள் அமைப்பதற்கும் முன்வந்துள்ளது. இதற்கான அடிக்கல்லும் அன்று நாட்டப்பட இருக்கின்றன.

இவ்விழாவை முன்னிட்டு இவ்வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தின் மூலம் ஒதுக்கப்படும் நிதியைக் கொண்டு ஒரு வருடத்துக்கு மன்னார் மாவட்டத்துக்கான அபிவிருத்தி வேலைகளை பல அமைச்சுக்களின் உதவியுடன் முன்னெடுக்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் நகர அபிவிருத்தி சபையுடன் பேச்சு நடத்தி மன்னார் மாவட்டத்தின் ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் 250 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்து அபிவிருத்திதிட்டங்களை இதன் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அவர்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட இருக்கின்றது.

இதன் மூலம் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் ஒரு நகரத்தை அபிவிருத்தி செய்து நவீனப்படுத்தவே இதன் ஏற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது. - எனத் தெரிவித்தார். (05)

# மாகாண அதிகாரம் மத்தியின் கைகளில்: ஆளுநர் மீள்பரிசீலனை செய்ய வேண்டும்

## அவைத் தலைவர் சிவஞானம் கோரிக்கை

மாகாண அதிகாரம் மத்திக்கு செல்வதை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாததோடு வடமாகாண ஆளுநர் அதற்கு உடந்தையாக இருக்கக் கூடாது என வட மாகாண சபை அவை தலைவர் சி.வி.கே. சிவஞானம் கோரிக்கை விடுத்தார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தற்போதைய ஆளுநரின் பதவியேற்புக்கு நான் சென்ற நிலையில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டது. அதை நான் பொருட்படுத்தவில்லை.

மக்கள் பிரதிநிதியாக அந்த நிகழ்வுக்கு சென்றமை சரி என்பதே எனது நிலைப்பாடு. இவ்வாறான நிலையில் வட மாகாண ஆளுநர் மாகாண யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளரை வட மாகாண சுகாதார பணிப்பாளராகத் தொடர்வதற்கு சமிக்ஞை காட்டுவதாக ஊடகங்கள் மூலம் அறிந்தேன்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் சத்தியமூர்த்திக்கும் எமக்கும் பிரச்சினை இல்லை. ஆனால், மத்திய அரசின் அதிகாரியாக இருக்கும் சத்தியமூர்த்தி மாகாண அதிகாரத்தைப் பயன்படுத்த முடியாது.

விரும்பினால், மத்திய அரசின் பதவி நிலைகளைக் கைவிட்டுவிட்டு மாகாண அதிகாரத்தின் கீழ் பதவி நிலைகளை வகிக்க முடியும்.

வட மாகாண ஆளுநர் மாகாண அதிகாரத்தை மத்திய அரசின் பிரதிநிதியாக இருக்கும் சத்தியமூர்த்திக்கு வழங்குவது தொடர்பில் சாதகமான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதாக அறிய முடிகிறது.


நான் ஆளுநரின் பதவியேற்புக்குச் சென்றதன் பின் இன்று வரை அவருடன் பேசியது இல்லை என்னுடைய வேலைகளை நான் பார்க்கிறேன் அவருடைய வேலைகளை அவர் பார்க்கிறார்.



ஆகவே மாகாண அதிகாரத்தை மத்திக்குவிட்டுக்கொடும்நிலைப்பாட்டில்ஆளுநர் செயற்படுவாராயின் அதனை அவர் மீள் பரிசீலனை செய்ய வேண்டும். - என்ற கருத்து எனது கருத்தாக பதிவு செய்ய விரும்புகிறேன் எனத் தெரிவித்தார். (05)

# பஸ்ஸை நிறுத்தி சாரதி கடத்தல்

## ஞாயிறு காலை கம்பளையில் சம்பவம்!




கம்பளை பிரதேசத்தில் பஸ் சாரதி ஒருவர் கடத்தப்பட்டுள்ளார். ஞாயிற்றுக்கிழமை காலை மாவெலயில் இருந்து கம்பளை நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸின் சாரதியே இவ்வாறு கடத்தப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ் ஓடிக்கொண்டிருந்தபோது வான் ஒன்றை நிறுத்தி பஸ்ஸுக்கு தடையை ஏற்படுத்தியே அதன் சாரதியை கடத்திச் சென்றதாக் கூறப்படுகிறது.

கடத்தப்பட்டவர் வத்தேகம பகுதியைச் சேர்ந்த 46 வயதுடையவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

யார் என்ன காரணத்துக்கு இந்த கடத்தலை மேற்கொண்டனர் என்பது இதுவரை வெளியாகவில்லை என்பதுடன் கம்பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (05)

# இரட்டைக் குழந்தைகள் இறப்பு ஆராய்வதற்கு குழு நியமிப்பு

களுபோவில போதனா வைத்தியசாலையின் குறைப்பிரசவப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த இரட்டைக் குழந்தைகள் உயிரிழந்துள்ள சம்பவம் ஒன்று கெஸ்பேவ பிரதேசத்தில் இருந்து பதிவாகியுள்ளது.

இதற்கு மருத்துவமனை ஊழியர்களின் அலட்சியமே காரணம் என குழந்தைகளின் பெற்றோர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

ஹொண்ணந்தர சர்வோதய மாவத்தை, கெஸ்பேவ பகுதியைச் சேர்ந்த அகிலா போனிபஸ் என்பவர் கடந்த 8 ஆம் திகதி பிரசவத்துக்காக களுபோவில போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

மறுநாள் இரட்டைக் குழந்தைகளை அவர் பெற்றெடுத்த நிலையில், குழந்தைகள் குறைமாத குழந்தை பிரிவில் சேர்க்கப்பட்டன. அவற்றில் ஓர் ஆண் குழந்தை கடந்த 19 ஆம் திகதி உயிரிழந்த நிலையில், சுவாசக் கோளாறு காரணமாக குழந்தை உயிரிழந்ததாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

அதன் பின், மற்ற குழந்தைக்கு பாலூட்ட சென்றபோது அந்தக் குழந்தையும் உயிரிழந்தமை தெரியவந்துள்ளது. இதனையடுத்து, இந்தச் சம்பவங்கள் தொடர்பாக குழந்தைகளின் பெற்றோர் கொஹுவல பொலிஸில் முறைப்பாடும் செய்துள்ளனர்.

இது தொடர்பில் களுபோவில போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சாகரி கிரிவந்தெனிய தெரிவிக்கையில், சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் பணிப்புரையின் பிரகாரம், இது தொடர்பில் ஆராய குழுவொன்று நியமிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (05)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

## ஜனாதிபதியின்....

(இரண்டாம்பக்கத்தொடர்ச்சி)

உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இதன்போது, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் நியூயோர்க் மெட்டா நிறுவனத்தின் உலகளாவிய விவகாரங்களுக்கான தலைவர்சேர்.நிக்கிளெக்குடன் சந்திப்பொன்றும் நியூயோர்க் நகரில் இடம்பெற்றது.

இதன்போது, இணையத்தளம் உள்ளிட்ட சமூக ஊடகங்களில்வெளியிடப்படும் வெறுப்பு பேச்சுக்கள் மற்றும் போலிச் செய்திகளை மட்டுப்படுத்த இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும்புதியநடவடிக்கைகளை ஜனாதிபதி எடுத்துக்கூறினார். அதுதொடர்பில்எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தபடவுள்ள உத்தேச சட்டமூலத்தின் மூலம், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு உயர் நீதிமன்றத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும், நாடாளுமன்றக் குழுவில் மீளாய்வு செய்து இந்த சட்டமூலம் தொடர்பில் மேலதிக திருத்தங்களை மேற்கொள்ள முடியும் எனவும் ஜனாதிபதி விக்ரமசிங்க தெரிவித்தார். செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்ப துறை மேம்பாட்டிற்கான இலங்கையின் திட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதன்போது விரிவாக விளக்கமளித்தார்.

ஐக்கியநாடுகளின்பொதுச் சபை கூட்டத் தொடருடன் இணைந்ததாக, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவாவிற்கும் இடையிலானசந்திப்புநியூயோர்க்கில் உள்ள ஐ. நா சபையின் தலைமையகத்தில் இடம்பெற்றதுடன், இலங்கையின் நிதித்துறை சீர்த்திருத்தங்கள் மற்றும் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்து சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளருடன் ஜனாதிபதி கலந்துரையாடினார்.

இதன்போது, இலங்கையில் பணவீக்கத்தைக் குறைத்ததுடன், நாட்டில் வர்த்தகத்திற்குபொருத்தமான சூழலை உருவாக்கியமை மற்றும் சுற்றுலாத்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து கிறிஸ்டலினா ஜோர்ஜீவா மகிழ்ச்சி தெரிவித்தார். மேலும், இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப அரசாங்கம் முன்னெடுத்துவரும் வேலைத்திட்டத்தின் முன்னேற்றத்தையும் அவர் பாராட்டினார் - என்றார்.

## இலங்கை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உபகரணங்கள் மற்றும் சீருடைகள் வழங்கும் நிகழ்வு நேற்று முற்பகல் ஹங்வெல்லராஜசிங்கமத்திய கல்லூரியில் நடைபெற்றது. 'சீதாவக்க - சிசு அருணலு' நிகழ்ச்சியில்கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சீனாவும் இலங்கையும் எப்போதும் பரஸ்பரம் மதிப்பதோடு நம்பிக்கையுடன் செயற்படும் நட்பு நாடுகள் என்பதைக் கூற வேண்டும். இந்த இரு நாடுகளும் எப்போதும் வலுவான கூட்டாண்மை மூலம் பரஸ்பரம் உதவுகின்றன.

இலங்கை மக்கள் தற்போதுதற்காலிகசிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர். ஆனால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கமற்றும்பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரின்தலைமையின் கீழ், அந்த சவால்களை எல்லாம் முறியடித்து நாட்டு மக்களுக்கு சிறந்த எதிர்காலத்தைகட்டியெழுப்ப முடியும் என நான் நம்புகிறேன். நிலைபேறான அபிவிருத்தியை அடைவதற்கும் அத்துடன் தற்போதுள்ள பொருளாதார பிரச்சினைகளை வெற்றி கொள்வதற்கும் சீனா எப்போதும் இலங்கைக்கு ஆதரவை வழங்குகிறது

இலங்கையும் சீனாவும் எப்போதும் ஒருவரையொருவர்நம்பும்மதிக்கும் சிறந்த அயல்நாடுகளாக காணப்பட்டன. ஒருவரிலிருந்து மற்றையவர் நன்மை பெறும் சிறந்த நண்பர்களாகவும் ஒருவருக்கு ஒருவர் உதவும் சிறந்த நண்பர்களாகவும் காணப்பட்டனர்.

சர்வதேச பிராந்திய உள்நாட்டு நிலைமைகள் எவ்வாறுமாற்றமடைந்தாலும் சீனா இலங்கை ஒத்துழைப்பு அனைத்து துறைகளிலும் வலுப்பெற்றுள்ளதுடன் எமது நட்புறவு இரு நாட்டு மக்களின் இதயங்களிலும் ஆழமாகவேரூன்றியுள்ளது.

தற்போது இலங்கையின் சகோதர சகோதரிகள் அபிவிருத்தி தொடர்பில் தற்காலிக நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமர் தினேஸ் குணவர்த்தன ஆகியோரின் வலுவான தலைமைத்துவத்தின்கீழ்இலங்கையின் துணிச்சலான மக்கள் இந்த நெருக்கடிகளை வெற்றி கொள்வார்கள் இலங்கைக்கு மிகவும்சிறந்தஎதிர்காலத்தை ஏற்படுத்திக்கொடுப்பார்கள்.

இலங்கை பேண்தகு அபிவிருத்தியை சாத்தியமாக்குவது வறுமை பொறியிலிருந்து விடுபடுவது அபிவிருத்தியுடன் தொடர்பற்ற பொறிகளில் இருந்து விடுபடுவது தனது சுதந்திரத்தை இறைமையை ஆள்புல ஒருமைப்பாட்டை தேசியகௌரவத்தை பேணுவதுபோன்றவற்றிற்கு உதவுவதற்காக சீனா தன்னால் முடிந்த எல்லைக்குள் நின்று உதவும்.

இலங்கை சீன உறவுகளை மேலும் துரிதப்படுத்துவதில் இந்த வருடம் மிகவும் முக்கியமானதாக விளங்குகின்றது பிரதமர் தினேஸ் குணவர்த்தன சீனாவின் யுனான் மாகாணத்திற்கு வெற்றிகரமான பயணத்தை மேற்கொண்டார். அடுத்த மாதம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீனாவிற்கு குறிப்பிடத்தக்க பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இரு நாட்டுத் தலைவர்களும் எட்டிய முக்கியமான ஒருமித்த கருத்தை ஆர்வத்துடன் செயல்படுத்துவதற்கும், இரு நாட்டு மக்களுக்கும் அதிக உறுதியான பயன்களைக் கொண்டு வருவதற்கும் இந்த உயர் மட்ட பயணங்களை ஒரு வாய்ப்பாக நாம் எடுத்துக் கொள்ளவேண்டும்-என்றார்.

## சுகாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு நாடுகள், அரசாங்கங்களுக்கிடையிலான அமைப்புக்கள் உட்பட ஏனைய தரப்புக் களுக்கும் வாய்ப்பளிக்கபடும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடகமையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

இம்முறை கலந்துரையாடலில் ஆசிய பசுபிக் வலயத்தின் 41 நாடுகளின் அமைச்சர்கள், 300க்கும் அதிகமான வெளிநாட்டு பிரதிநிதிகள் மற்றும் 100க்கும் அதிகமான தொழில் வான்மையாளர்கள் பங்குபற்றுவர் என எதிர்பார்ப்பதாகவும், 2024 பெப்ரவரி 24 தொடக்கம் மார்ச் 01ஆம் திகதி வரை நைரோபில் நடைபெறவிருக்கும்ஆறாவது ஐ.நா சுற்றாடல் சபையின் அமர்விற்கு இணையாக குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, இங்கு கருத்து தெரிவித்த, சுற்றாடல் அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க,

பிரதான கருத்தாடலுக்கு நிகராக ஆசிய - பசுபிக் இளையோர் சுற்றாடல் அமைப்பு, ஆசிய அமைதி வலயத்தின் பிரதான குழு மற்றும் பங்குதாரர்களின் அமைப்பு உட்பட சுற்றாடல் தொடர்பான ஆசிய அமைதிக்கான அறிவியல் கொள்கைகளுக்கான வர்த்தக அமைப்பு உள்ளிட்ட அமைப்புக்களின் பல சுற்று கலந்துரையாடல்கள் இடம்பெற வுள்ள தெனவும் தெரிவித்தார்.

நிலையான பலதரப்புச் செயற்பாடுகளை கருத்தில் கொண்டு, காலநிலை அனர்த்தங்கள், உயிரியல் பல்வகைத்தன்மை அழிவு மற்றும் சுற்றாடல் பாதிப்பு உள்ளிட்டபிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான வாய்ப்பாகஅமையும்எனவும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

மேற்படி சவால்களுக்கு எதிராக தீர்வு காணும் உலகளாவியமுயற்சிகளுக்கு பங்களிப்புச் செய்யும் வகையில் ஆசிய - பசுபிக் பிராந்தியத்தின் சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கும் முன்னுரிமை அளிப்பதற்குமான களத்தை, அரசுகளுக்கும், அரசுகளுக்கிடையிலானஅமைப்புக்களுக்கும், அமைத்துக்கொடுக்கும் என்றும் குறிப்பிடப்பட்டார்.

## சீதாவக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பன்னிரண்டாயிரம்பாடசாலை மாணவர்களுக்கு இன்று பாடசாலை உபகரணங்கள் மற்றும் சீருடைகள் வழங்கப்படுகின்றன. பிரதமரின் சீனப் பயணத்தின் விளைவாகவே இந்த உதவி கிடைத்துள்ளது. ஹங்வெல்ல ,அவிசாவளை என்பது மேல் மாகாணத்தில்மேம்பட்டகல்வி முறையைக் கொண்ட ஒரு பிரதேசமாகும். அதற்காகப் பெரியஅர்ப்பணிப்பைபிரதமர் செய்து வருகிறார்.

கடந்த ஆண்டு நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியின் காரணமாக கல்வி மற்றும் சுகாதாரத்திற்காக பெருமளவு நிதியை ஒதுக்க முடியவில்லை. ஆனால், அரசாங்கமென்ற வகையில், அடுத்த ஆண்டு முதல்கல்விமற்றும்சுகாதாரத் துறைக்கு அதிக நிதி ஒதுக்க திட்டமிட்டுள்ளோம்.

க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தரம் பற்றிப் பேசும் போது பாடசாலைக்கல்விமுறையும் டியுசன் கல்வி முறையும் செயற்படுகின்றன.கல்விக்காக அரசாங்கம் செலவழிக்கும் பணத்தைப் போலவே, பெற்றோரும் தங்கள் குழந்தைகளின் கல்விக்காக செலவிடுகின்றனர். இதனைக் கண்டறிந்து புதிய கல்வி முறையைத்தயாரிக்க எதிர்பார்க்கிறோம். கல்வியியலாளர்கள் மற்றும் மாணவர்களின் கருத்துகளைப் பெறவும்எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும்,குழந்தைகளுக்கு தேவையான தொழில்சார் கல்வியை வழங்க தேவையான சூழலை உருவாக்க வேண்டும். தொழிற்கல்வியை மறுசீரமைத்துஇலங்கையை தொழிற்பயிற்சி கேந்திர நிலையமாகமாற்றமுயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். இதன் மூலம் இலங்கையின் எதிர்கால வளர்ச்சிக்குத் தேவையான தொழில்சார் அறிவைக் கொண்ட ஒரு பிரஜையை உருவாக்கும் திறன் எமக்குக் கிடைக்கும். ஆவுஸ்திரேலியா போன்ற நாடுகள் தங்கள் நாட்டின் எதிர்கால சந்ததியினரை நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிக்கும் வகையில் உருவாக்குகின்றன.

ராஜசிங்க மன்னன் பற்றிய கவிதை ஒன்று இங்கு வாசிக்கப்பட்டது. அன்று ராஜசிங்க மன்னர் இருந்திருக்காவிட்டால்இன்று இலங்கை மொசாம்பிக் அல்லதுஅங்கோலாநாட்டைப் போன்று மாறியிருக்கும். முழுத் தெற்காசியாவிலும் போர்த்துக்கேயர்களை தோற்கடித்த ஒரே மன்னன் இராஜசிங்க மன்னன் தான்.

சீதாவக்க இராசதானியினால் நம் நாட்டின் சுதந்திரம் பாதுகாக்கப்பட்டது. அடுத்த தலைமுறைக்கு அது தொடர்பான அறிவை வழங்கும்வகையில்சீதாவக்க பகுதியில் அருங்காட்சியகம் ஒன்றை அமைக்க திட்டமிட்டுள்ளேன்.

சீதாவக்க இராசதானி பற்றி பல புராணக்கதைகள் உள்ளன. குறிப்பாக முல்லேரியாபோர்இடம்பெற்ற இடத்திலும், தந்துரேயுத்தம் இடம்பெற்ற இடத்திலும் நினைவுச் சின்னங்களை அமைக்குமாறும்பாதுகாப்புப் படைகளின்பிரதானிசவேந்திர சில்வாவுக்கு பணிப்புரை விடுத்துள்ளேன். இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கதொல்பொருள்திணைக்களத்திற்கும் தேவையான அறிவுரைகளும் வழங்கப்பட்டுள்ளன.

நாம் வரலாற்றை மறந்துவிடக்கூடாது. மேலும், இந்நாட்டு மன்னர்கள் ஆற்றிய சேவையை நாம் மறந்துவிடக்கூடாது. ராஜசிங்க மன்னருக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு, சூளவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயமொன்றின் காரணமாக, ராஜசிங்க மன்னர் புறக்கணிக்கப்பட்டுள்ளார்.இந்த வரலாற்றைப் பற்றி நாம் சிந்திக்கவில்லை.

தோற்றவர்கள்வீரர்களாக போற்றப்படுகின்றனர்.போரில் வெற்றி பெறுபவர்கள் ஒதுக்கி வைக்கப்படுகிறார்கள். எனவே, சீதாவக்க ராஜசிங்க மன்னரின் வாழ்க்கைச் சரிதம் குறித்து மறு ஆய்வு செய்ய வேண்டும் என்று கருதுகிறேன்.

குறிப்பாக சீத்தாவக்க புராதனத்தன்மையை வெளிக்கொண்டு வருவதற்கான பணிகளை ஆரம்பிக்குமாறு நான் தொல்பொருள் திணைக்களத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளேன். ஏனென்றால் இன்னும் சில வருடங்களில் இது ஒரு நகரமாக மாறிவிடும். கோட்டை நகருக்கு நடந்தது சீத்தாவக்கவுக்கும் நடக்க வாய்ப்புள்ளது. எனவே, அதற்கு முன்னர் இந்தப் பணியை ஆரம்பிக்க வேண்டும்.

எதிர்காலத்தை உருவாக்கும்போது, கடந்த காலத்தையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்த அனைத்து சீதாவக்க பாடசாலைகளின்பிள்ளைகளையும் சீதாவக்க இராசதானி மற்றும் சீத்தாவகவின் வரலாறு பற்றிய விடயங்களை எழுதி எங்களுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவற்றில் சிறந்த படைப்பை சமர்ப்பிக்கும் பாடசாலைக்கு பரிசு வழங்கவும் நான் எதிர்பார்க்கின்றேன் - என்றார்.

## தொழில்சார்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் தினேஷ் குணவர்தனவின் பங்களிப்புடன் இடம்பெற்றது.

அங்கு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தொழிற்சாலைகள் அமைக்கப்பட்ட பின்பே தொழிற்சங்கங்கள் அனைத்தும் உருவாகின. தொழில்மயமாக்கலுக்கு சென்றிருக்காவிட்டால் தொழிற்சங்கங்களும் இருந்திருக்காது. அதனால் தொழிற்சாலைகளிலேயே தொழில்யுகம் ஆரம்பமானது. குறிப்பாக கால் மாக்ஸின் தீ கெபிடல் நூலின் பின்பே தொழிற்சங்கங்கள் 2 மற்றும் 3 பன்னாடுகள் (2nd International, 3rd International) என்று இரண்டாகப் பிளவுபட்டன.

இருப்பினும் இலங்கையின் தொழிற்சங்கங்கள் தொழிற்சாலைகளில் ஆரம்பிக்கவில்லை. எமது நாட்டில் தொழிற்சாலைகள் இருக்கவும் இல்லை. அரச ஊழியர்கள் வாயிலாகவே எமது தொழிற்சங்கங்கள் உருவாகியுள்ளன. புதிய துறைமுகங்கள், கனிய எண்ணெய் நிறுவனம், பேருந்து நிறுவனங்கள் என அனைத்தும் அரசமயமாக்கப்பட்டதால்மேற்படிச் சங்கங்கள்அரசுக்குள்ளேயே தோன்றின.

இன்றளவில் தொழிலாளர்கள், தொழில் வகுப்பிலிருந்து மத்திய தரத்திற்கு வளர்ந்துள்ளனர். பயிற்சி பெற்ற புதியவர்களையே தொழிலாளர்கள் என்று கூற முடியும். தொழிலாளர்கள் என்ற வகையில் அவர்களின் தேவைகள் வேறுபட்டவையாக காணப்படுகிறன.

இன்று மேற்கில் பெருமளவானோர் 25-30 சதவீதமான வேலைத்தளம் ஒன்று இல்லாமல் செயற்படுகின்றனர். அவர்களை எவ்வாறு ஒன்றுதிரட்ட முடியும்? வீட்டிலிருந்து அவர்களினால் பணிகளை செய்யமுடிகிறது.விருப்பமான நேரத்தில் வேலைகளை தொடங்கவும் முடியும். இவ்வாறு புதிய முறையில் இடம்பெறுகின்றன. அது தொடர்பிலான விவரங்களும் அமைச்சர் மனுஷவின் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனுடன் நாம் எவ்வாறு முன்னோக்கிச் செல்லவேண்டும்என்றுஅவர் சிந்திக்க வேண்டியுள்ளது. தொழிற்சங்கங்களை நிகழ்நிலை முறைமைக்கு மாற்றுவதாக அல்லது புதிய தொழிற்சங்கங்களை தோற்றுவிப்பதா என்று சிந்திக்க வேண்டியுள்ளது. கடந்த காலங்களில் மக்களை ஒன்றுதிரட்டவே தொழிற்சங்கங்கள் உருவாக்கப்பட்டன. இருப்பினும் இன்று அந்த நிலைமையைக் காண முடியதில்லை. அதனால் மாற்றத்துடன் தொழில்சார் அமைப்புக்களை எவ்வாறு ஒன்றுதிரட்ட முடியும் என்பது தொடர்பில் புதிதாக சிந்திக்க வேண்டியுள்ளது. அந்த பொறுப்பை அமைச்சர் மனுச நாணயக்காரவிடத்தில் ஒப்படைத்துள்ளேன் - என்றார்

## பலம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:

கியூபாவில் நடைபெற்ற ஜி77 நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் பங்கேற்றிருந்தார். இந்த மாநாடு சீனாவின் தலைமையில் நடைபெற்றிருந்தது.

இந்த மாநாட்டின் நிறைவில் புகைப்படம் எடுக்கப்பட்டபோது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மத்தியில் இடமளிக்கப்பட்டது. இதுவொரு சாதாரண விடயமல்ல.

இவ்வாறான மாநாடுகளில் மத்தியில் சிரேஷ்டத்துவத்தினைஅல்லதுஉலகின் பலம்மிக்கதலைவர்களுக்கே இடமளிக்கப்படுவது வழக்கமாகும். அந்தவகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உலகின் பலம் மிக்க தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளார்.

அதுமட்டுமன்றி, இந்த மாநாட்டின்போது இருதரப்பு உறவுகள் மற்றும் சீன உறவுகள்என்றுஅனைத்தும் வலுவாக்கப்பட்டுள்ளன - என்றார்.

## இரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருவரையும் தமிரக பொலிசார் மீட்டு விசாரணை மேற்கொண்டுவருகின்றனர். விசாரணையின் பின்னர் மண்டபம் முகாமில் தங்கவைக்கப்படவுள்ளனர்.

## அரசுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது.

இதன் மூலம் சாதாரணமாக மனிதர்கள் கூட கருத்துக்களை தெரிவிக்க முடியாதசூழல்ஏற்படுகின்றது. அரசாங்கத்தின் இந்த அடக்குமுறை எதிராக நாம் ஏனையதரப்பினருடன்ஒன்று இணைந்துசெயல்படுவதற்கு தயாராக உள்ளோம் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறோம் -என்றார்.

## தங்கம்,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினர், கிராம சேவையாளர், தொல்லியல் திணைக்களத்தினர், சுகாதார பிரிவினர், தடயவியல் பொலிஸார் முன்னிலையில் அகழ்வு இடம்பெற்றது.

நேற்றையதேடுதலில்சில தகரங்கள்மட்டுமேவெளியில் வந்தன.பணமோநகைகளோ கிடைக்கவில்லை. இன்று இரண்டாவது நாளாகவும் அகழ்வுப் பணிகள் தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# மட்டக்களப்பில் டெங்கு தீவிரம் 168 வீடுகளில் பரிசோதனை

## 47 கிணறுகளில் மீன் குஞ்சுகள் விடப்பட்டன









மட்டக்களப்பு மாவட்டத்தில் பருவமழை பெய்ய ஆரம்பித்திருப்பதால் டெங்கு நோய் தீவிரமாக பரவும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. இதனைக் கருத்திற்கொண்டு சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜி.சுகுணனின் பணிப்புரையின் பேரில் மட்டக்களப்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் லதாகரனின் வழிகாட்டலில் ஞாயிற்றுக்கிழமை காலை கோட்டைமுனை பிரதேசத்தில் பாரிய டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது ஆறு பிரிவுகளாக சுகாதார பகுதியினர் பிரிக்கப்பட்டு 168 வீடுகளில் டெங்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதேவேளை 47 கிணறுகளில் டெங்கு குடம்பிகளை உண்ணுகின்ற மீன் குஞ்சுகள் விடப்பட்டன.

கோட்டைமுனை சுகாதார பரிசோதகர் ரி.மிதுன்ராஜ் தலைமையில் சுகாதாரப் பரிசோதகர்கள், மாநகர சபை ஊழியர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இப்பரிசோதனை நிகழ்ச்சித் திட்டத்தில் இணைந்திருந்தனர். டெங்கு பரவும் இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டு எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன், தேவையற்ற பொருள்கள் மட்டக்களப்பு மாநகர சபை சுத்திகரிப்பு தொழிலாளர்களால் அகற்றப்பட்டன.

இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் மட்டக்களப்பு மாநகர சபையின் சுகாதார பிரிவினரும் பங்குகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# மட்டு. ரிஆ பல்கலையின் கட்டுப்பாடு தகவல் தொழில்நுட்பக் கல்லூரியிடம்

## பாதுகாப்பு சபை கூட்டத்தில் தீர்மானம்

மட்டக்களப்பு -புனானியில் நிர்மானிக்கப்பட்டுள்ள ரிஆ பல்கலைக்கழகத்தின் உரிமத்தை எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவுக்கு தொடர்ந்தும் வழங்கவும் கட்டுப்பாட்டு மற்றும் கண்காணிப்பு அதிகாரத்தை ஹோமாகமவில் அமைந்துள்ள இலங்கை தகவல் தொழில்நுட்ப கல்லூரிக்கு வழங்கவும் பாதுகாப்பு சபை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பாதுகாப்பு சபை கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரத்தில் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு கியூபா மற்றும் அமெரிக்கா சென்றிருந்த நிலையில், ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க தலைமையில் பாதுகாப்பு சபை கூட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்த கூட்டத்தில் நாட்டின் பாதுகாப்பு சார்ந்த விடயங்கள் குறித்து மதிப்பாய்வு செய்யப்பட்டது.

பாதுகாப்புத்துறை சார்ந்த பிரதானிகளை தவிர, இலங்கை தகவல் தொழில்நுட்ப அதிகாரிகளும் பாதுகாப்பு சபை கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

2019 ஆம் ஆண்டில் இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் நாட்டில் முன்னெடுக்கப்பட்ட உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டுத்தாக்குதல்களைத் தொடர்ந்து இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட மட்டக்களப்பு ரிஆ பல்கலைக்கழகம் குறித்து பாதுகாப்பு சபை கூட்டத்தில் கவனத்துக்குட்பட்டது.

எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவினால் நிர்மானிக்கப்பட்டிருந்த இந்த ரிஆ பல்கலைக்கழத்தின் கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு அதிகாரத்தை ஹோமாகமவில் அமைந்துள்ள இலங்கை தகவல் தொழில்நுட்ப கல்லூரிக்கு வழங்கவும் பல்கலைக்கழகத்தின் உரிமத்தை தொடர்ந்தும் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவுக்கு வழங்கவும் பாதுகாப்பு சபை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இலங்கையில் இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட உயிர்த்த ஞாயிறு தற்கொலை தாக்குதல்களை தொடர்ந்து மட்டக்களப்பு - புனானியில் நிர்மானிக்கப்பட்டுள்ள ரிஆ பல்கலைக்கழகம் குறித்து சர்ச்சைகள் எழுந்தன. இதனைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சின் உத்தரவுக்கமைய, இராணுவத்தின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் மட்டக்களப்பு ரிஆ பல்கலைக்கழகம் கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# வாள் வைத்திருந்த இளைஞர் யாழ் நெல்லியடியில் கைது

யாழ்ப்பாணம் - நெல்லியடி குடவத்தை பகுதியில் 21 வயதான இளைஞர் ஒருவர் வாள் வைத்திருந்த குற்றச் சாட்டில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த இளைஞரைப் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (05)


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


தொழிற்துறைத் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Tourism
Northern Province
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
உலக சுற்றுலா தினம் 2023
செப்டெம்பர் 27, 28, 29
மாலை 4.00 மணி தொடக்கம் இரவு 9.00 மணி வரை
இடம் :- யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகம்
உணவு மற்றும் கைப்பணிப் பொருள் சந்தை
கலாசாரத் திருவிழா
அனுசரணையாளர்கள் :-
HNB
BANK OF CEYLON
BOC
Bankers to the Nation
The Thinnai
Jetwing JAFFNA
TILKO
JAFFNA CITY HOTEL
Chrysalis
Catalyzing change
ஊடக அனுசரணையாளர்:-
காலைக்கதிர்
Kalaikkathir
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

காலைக்கதிர் Kalaikkathir

# அலி சப்ரி ரஹீம் தொடர்பில் ஏன் இதுவரையில் சட்டநடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை?

## இலஞ்ச, ஊழல், வீண் விரயத்திற்கு எதிரான பிரஜைகள் சக்தி கேள்வி



நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் சட்ட விரோத மான முறையில் தங்கத்தைக் கொண்டு வந்தமை தொடர்பில் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவில் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பான விசாரணைகள் நிறை வடைந்துள்ளன.

இருப்பினும் இந்த விடயம் தொடர்பில் இதுவரையில் எந்த வித சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என இலஞ்ச, ஊழல், வீண் விரயத்துக்கு எதிரான பிரஜைகள் சக்தியின் தலைவர் ஜாமுனி காமந்த துஷார தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் சட்ட விரோதமான முறையில் தங்கத்தைக் கொண்டு வந்தமை தொடர்பில் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவில் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பான விசாரணைகள் நிறைவடைந்தமை தொடர்பில் இலஞ்ச, ஊழல், வீண் விரயத்துக்கு எதிரான பிரஜைகள் சக்தி கொழும்பில் ஏற்பாடு செய்தி ருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக் கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

சுங்க கட்டளைச் சட்டத்தின் 129 ஆவது சரத்தின் படி ஏதேனும் குற்றவாளிக்கு 3 வருடங்கள் அப ராதம் விதிக்க விசாரணை அதி காரிக்கு அதிகாரம் உள்ளது.

இந்த சட்டத்தின் 163 ஆவது சரத்தின்படி அரசுடைமையாக்கு-வது அல்லது தண்டனைக்குரிய குற்றமாக அடையாளம் காணப்ப டும் சந்தர்ப்பத்தில் அதனைத் தளர்த்துவதும் விசாரணை அதி காரியிடம் உள்ளதாக சுங்கத் திணைக்கள பணிப்பாளர் நாய கத்தால் வழங்கப்பட்டுள்ள அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயங்களைக் கருத்தில் கொண்டு நோக்கும் போது முறைப் பாடுகள் தொடர்பில் தொடர்ந்தும் செயற் படாமல் இருக்க ஆணைக்குழு நடவடிக்கை எடுத் துள்ளது. இது திரு டனின் தாயிடம் கேட்பதை போன்று சுங்கத்திணைக்க ளம் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் இது சரியா அல்லது தவறா? என்பதுகேட்டு இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணைகளைநிறைவுசெய்கிறது.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு புதிய சட்டமொன்றைக் கொண்டு வந்தது. திருடர்களை காப்பாற்றவா இந்த சட்டங்கள் இருக்கின்றன? என நாம் வினவுகிறோம். - என்றார். (05)

# வலுவானதும் சுபீட்சமானதுமான இலங்கையை கட்டியெழுப்புவதற்கான ஒத்துழைப்பு தொடரும்

## அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் உறுதி

வலுவானதும் சுபீட்சமா னதுமான இலங்கையைக் கட்டி யெழுப்புவதற்கு அவசியமான ஒத்துழைப்புக்களை அமெரிக்கா எப்போதும் வழங்குமென அமெ ரிக்க இராஜாங்கத்திணைக்களத்தி ன்அரசியல்விவகாரங்களுக்கான செயலாளர்விக்டோரியாநூலண்ட் உறுதியளித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக நியூயோர்க் சென்ற ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமை யிலான உயர்மட்டப் பிரதிநிதிகள் குழு, கடந்த வாரம் முழுவதும் அங்கு பல்வேறு உயர்மட்ட சந்திப்புக்களில்கலந்துகொண்டது.

அதன் ஓரங்கமாக வெளி விவகார அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான இலங்கையின் உயர்மட்டப்பிரதிநிதிகள்குழுவுக்கும் அமெரிக்க இராஜாங்கத்தி ணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான செயலாளர் விக்டோரியா நூலண்ட்டுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த வார இறுதியில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது இலங்கைக்கும்அமெரிக்காவுக்கும் இடையிலான இருதரப்புத் தொடர்புகளை மேலும் வலுப் படுத்திக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் மற்றும் அதுசார்ந்த விடயங்கள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடியதாக அமைச்சர் அலி சப்ரி அவரது ருவிட்டர் பதி வில் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை இந்தச் சந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள விக்டோரியா நூலண்ட், வலுவானதும் சுபீட்ச மானதுமான இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு அமெ ரிக்கா எப்போதும் ஆதரவளிக்கும் என் றும், இருநாடுகளுக்கும் இடையிலானஒத்துழைப்புஐக்கிய நாடுகள் பொதுச்சபையிலும் தொடரும் என்றும் உறுதி யளித்துள்ளார்.

அத்தோடு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியுடனான சந்திப்பின்போது அமெ ரிக்காவின் பொருளாதார ரீதி யான ஒத்துழைப்புக்கள், மனித உரிமைகள் மற்றும் சுதந்திர மான இந்திய-பசுபிக் பிராந்தி யத்தைக் கட்டியெழுப்புவதை முன்னிறுத்தியஇருநாடுகளினதும் கடப்பாடு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந் துரையாடியதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# கிராமிய நெல் திருவிழா விருந்தில் திடீர் மோதல்

## மிஹிந்தலையில் ஒருவர் உயிரிழப்பு

மிஹிந்தலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சீப்புக்குளம் பகுதி யில் விருந்தொன்றின்போது இடம்பெற்ற மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மிஹிந் தலை பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

சீப்புக்குளம்பகுதியைச்சேர்ந்த எஸ்.எம். கருணாரத்னசிசிரகுமார சேனவிரத்ன என்ற 59 வயதான நபரே உயிரிழந்துள்ளார்.

சனிக்கிழமைஇரவுசீப்புக்குளம் பகுதியில் விவசாயப் பணிகள் நிறைவடைந்தநிலையில், கிராமிய நெல் திருவிழாவையடுத்து, அருகில் உள்ள வீடொன்றில் விருந்துபசாரம் இடம்பெற்றது.

இந்தவிருந்தின்போது ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறிய நிலையிலேயே இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது. (05)

# இலங்கை வருகிறார் ஈரானிய ஜனாதிபதி



உமா ஓயா பல்துறை திட் டத்தைத் திறந்து வைப்பதற்காக ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசிக் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். இந்த விஜயம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் இடம்பெறவுள்ளது.

ஈரான்அரசின்உதவித்திட்டத்தி ன் கீழ் உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டம் பதுளை ம ாவட்டத்தில்முன்னெடுக்கப்பட்டுள்ள நீர்ப்பாசனம் மற்றும் நீர்மின் சக்தி வளாகமாகும். திட்டத் திற்கான ஆரம்ப மதிப்பீடுகள் 1989ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இந்த திட்டத்தின் பிரகாரம் தல்கொல்லஓயாவின்குறுக்கேஓர் அணைகட்டுவதும்,சுரங்கப்பாதை ஊடாக நீரை மின்திட்டத்துக்கு அனுப்பப்படுகிறது.

உமா ஓயாவின் துணை நதி களான மாத்தட்டிலா ஓயாவுக்கு குறுக்கே மற்றொரு அணை கட்டப்பட்டு சுரங்கப்பாதை வழி யாக உமா ஓயா மின் நிலை யத்துக்கு கொண்டுசெல்லப்படும்.

எவ்வாறாயினும் 2008ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இந்த தி ட்டத்தின் கட்டுமான பணிகள் தி றந்து வைக்கப்பட்டன.

மொத்த திட்டச் செலவாக சுமார் 529 மில்லியன் டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் 85 வீதம் ஈரான் அரசாங்கத்தால் வழங்கப்படுகிறது.

இதேவேளை உமா ஓயா நீர் மின்நிலையத்தின்அலகுஒன்றின் மின் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச் சர் காஞ்சன விஜேசேகர தெரி வித்துள்ளார். அதேபோல், எதிர்வரும் டிசெம்பர் மாதம் அலகு 2 இன் மின் உற்பத்தி ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் திட்டத்தை திறந்து வைக்கும் வகையிலேயே ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசிக் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்கிறார். நியூயோர்க்கில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை அமர்வில் கலந்துகொண்டிருந்த ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க, பக்க நிகழ்வாக ஈரான் ஜனாதிபதியைச் சந்தித்துகலந்துரையாடிஇருந்தார். இதன்போதே உத்தியோகபூர்வ அழைப்பை ஜனாதிபதி ரணில் விடுத்திருந்தார்.

இலங்கை மற்றும் ஈரானுக்கு இடையிலான பொருளாதார தொடர்புகளை விரிவுபடுத்தி க்கொள்வதில் இருதரப்பும் ஆர்வம் செலுத்தியுள்ளன. ஈரான் ஜனாதி பதியின் இலங்கை விஜயத்தி ன்போது கூட்டு பொருளாதார ஆணைக்குழுவொன்றை நிறுவுவதற்கு திட்டமிடப் பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (05)

# திருமலை மாவட்ட மீன்பிடி தடை குறித்து ஆளுநர் மீள்பரிசீலனை செய்ய வேண்டும்

## இம்ரான் எம்.பி. கோரிக்கை



கிழக்கு மாகாண ஆளுநர் திரு கோணமலை மாவட்ட மீன்பிடி தடை குறித்து எடுத்த ஒருதலைபட்சமான முடிவு இம்மாவட்ட மீனவர்களின் வாழ்வாதாரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து ஆளுநர் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மக்ரூப் தெரிவித்தார்.

கடந்த சில தினங்களாக திருகோணமலை மாவட்ட மீனவ குழுக்களுக்கிடையில்நிலவும்முறுகல் நிலை தொடர்பாகவும், அது குறித்து ஆளுநர் எடுத்த தீர்மானம் குறித்தும் கருத்து வெளியிடும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

சுருக்குவலையை பொறுத்தவரை யில் அனுமதிக்கப்பட்ட சுருக்கு வலை, அனுமதிக்கப்படாத சுருக்கு வலை என இரண்டு வகையான சுருக்கு வலைகள் உள்ளன. இது தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் உள்ளது.

இதில்சட்டரீதியாகஅனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட சுருக்கு வலை மூலம் கிண்ணியா, மூதூர், திருகோணமலை, நிலாவெளி, இறக்கக்கண்டி, குச்சவெளி, புடவைக்கட்டு, புல்மோட்டை, வெருகல் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த 5000 இற்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்கின்றனர்.

எனினும், அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட சுருக்கு வலைக்கும் அனுமதிப் பத்திரம் வழங்க முடியாத சுருக்கு வலைக்கும் வித்தியாசம் அறியாமல் ஆளுநர் தற்போது சுருக்கு வலைஎன்பதுசட்டவிரோதமானஒன்று என்ற நோக்கில் எடுத்த ஒருதலைபட்ச முடிவு திருகோணமலை மாவட்ட சிறுபான்மை மீனவ சமூகத்தின் வாழ்வாதாரத்தை இல்லாமலாக்கும் முயற்சியாக உள்ளது.

இங்கு இரண்டு மீனவக் குழுக்களுக்கிடையில்ஏற்பட்டதொழில் போட்டிகாரணமாகவே முறுகல்நிலை ஏற்பட்டது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் இரண்டு குழுக்களையும் அழைத்து இரு பக்க நியாயங்களையும் கேட்ட பின்பேதீர்மானத்துக்குவரவேண்டும்.

ஆனால், கிழக்கு மாகாண ஆளுநர் இதில் ஒரு குழுவினரின் கருத்தைக் கேட்டே இந்த மீன்பிடி தடை தீர்ம ானத்துக்கு வந்துள்ளார். இது குறித்து அவரை நேரில் சந்தித்து விடயத்தை தெளிவுபடுத்த பல தடவை முயற்சித்த போதும் அவரைச் சந்திக்க முடியாத நிலை ஏற்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை மீன் நுகர்வில் 50 வீதத்துக்கு அதிகமானவை சுருக்கு வலைமூலமேபூர்த்திசெய்யப்படுகிறது. சாதாரண மீனவக் குடும்பங்கள் இந்தத் தொழிலிலேயே தங்கியுள்ளன.

எனவே, இந்த விடயங்களைக் கவனத்தில் கொண்டு கிழக்கு மாகாண ஆளுநர் இரண்டு தரப்பு நியாயங்களையும் கேட்டறிந்து பூரண தகவல்களை பெற்ற பின்னர், நடவடிக்கைகளை முன்னெடுப்பதே நியாயமானதாக இருக்கும்.

ஆளுநரின் இந்த நடவடிக்கை இம்மீனவக் குடும்பங்களின் அத்தி யாவசியத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாத சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, இது குறித்து ஆளுநர் மீள் பரிசீலனை செய்து, உடனே நியாய மான தீர்மானத்துக்கு வர வேண்டும். இன்றேல், எதிர்காலத்தில் பாரிய மக் கள் எதிர்ப்பு ஒன்றை சந்திக்க நேரிடும் எனவும் அவர் தெரிவித்தார். (05)

# கட்டடத்தில் இருந்து கீழே விழுந்த முதியவர் இறப்பு

## நுவரெலியாவில் சம்பவம்

நுவரெலியா கட்டுமான பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டடம் ஒன்றில் தொழில் புரிந்து வந்த ஊழியர் கட்டடத்தில் இருந்து கீழே விழுந்து உயிரிழந்துள்ளார். குறித்த கட்டடத்தில் முதலாவது மாடியில் இருந்து ஊழியர் தவறி கீழே விழுந்துள்ளார் எனப் பொலி-ஸார் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் மஹவலவத்தகீழ்பிரிவு, இரத்தினபுரியை வசிப்பிடமாக கொண்ட 59 வயதான சுப்பிரமணியம் வடிவேலு என்பவர் ஆவார். குறித்த நபர் சனி இரவு அதிக மதுபோதையில் இருந்தார் என வும் இரவு முழுவதும் தங்கியிருந்த இடத்தில் அவரை காணவில்லை எனவும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் தேடிப் பார்த்தபோதே நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டடத்தின் வெளியே இறந்த நிலையில்கிடந்தார்எனசகதொழிலாளர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

மரணவிசாரணைகளின்பின்னர்,சடலம் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு பிரேத பரிசோதனை இடம்பெற்றதன் பின்னர், உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் நுவரெலியா பொலிஸார்விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர். (05)


சுற்றுலாப் பணியகம்
வடக்கு மாகாணம்
பெருமையுடன் வழங்கும்
உலக சுற்றுலா தினம் - 2023
வடக்கின் திருவிழா
பாரம்பரிய இசை மற்றும் நடன நிகழ்வுகள்
கைவினைப் பொருட்கள் விற்பனை
உணவு விற்பனை
நீர் விளையாட்டுக்கள்
29.09.2023
காலை 09.00 - இரவு 09.00
WORLD TOURISM DAY 2023
TOURISM & GREEN INVESTMENTS
இடம்: யாழ்ப்பாண கலாசார நிலையம்
ஊடக அனுசரணை :
காலைக்கதிர்
Kalaikkathir

# கிழக்கு மாகாண ஆளுநரை சந்தித்தார் சாணக்கியன்



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், தமிழரசுக்கட்சியின் திருகோணமலை மாவட்ட தலைவர் குகதாசன் ஆகியோர் அவசரமாக சந்திக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு அமைவாக ஞாயிற்றுக்கிழமை அதற்கான நேரம் வழங்கப்பட்டது.

இந்தச் சந்திப்பின் முக்கிய காரணம் மயிலத்தமடு மாதவனை போன்ற பிரதேசங்களில் இடம்பெறும் தமிழருக்கு சொந்தமான காணி அபகரிப்பு தொடர்பில் கால்நடை அமைப்புக்கள், பண்ணையாளர்களால் தொடர்ச்சியாக நடந்துவரும் அறவழிப் போராட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் தங்கள் போராட்டத்துக்கு வரவேண்டும்என்றகோரிக்கைக்கு அமைவாக அவரிடம் ஆவணம் கையளிக்கப்பட்டது.

எனினும மகாவலி அதிகார சபைக்கு உட்பட்ட இந்தக் காணிகள், ஆளுநரின் அதிகாரத்துக்கு அப் பாற்பட்டு நேரடியாக கபினட் அமைச்சருக்குள் வருவதால் இந்தப் பிரச்சினை சம்பந்தமாக ஆளுனரால்தீர்க்கமான முடிவுகள் எடுக்க முடியாது.

அதே சமயம் இதற்கான தீர்க்கமான முடிவை எடுக்கும் நோக்கில் கபினட் அமைச்சர் அல்லது ஜனாதிபதியை நேரடியாக சந்திக்கதீர்மானித்திருப்பதாகஅவரிடம் தெரிவிக்கப்பட்டது. அத்தோடு திருகோணமலை மாவட்டம் சம்பந்தப்பட்ட தொல்பொருள் மற்றும் காடுகள் சம்பந்தப்பட்ட பிரச் சினைகள் சம்பந்தமாகவும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப் பட்டது. (05)

# ஓய்வுபெற்ற கணக்காய்வாளர்களுக்கான கொடுப்பனவை அதிகரிக்க நடவடிக்கை

## தினேஸ் குணவர்த்தன தெரிவிப்பு



ஓய்வுபெற்ற கணக்காய்வாளர்களுக்கு 25,000 ரூபா கொடுப்பனவை ஓய்வூதியத்துடன் 50,000 ரூபாவாக அதிகரிப்பதற்கான யோசனை பிரதமர் மற்றும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் தினேஷ் குணவர்தனவால் நாடாளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றசமீபத்தியகோட்பாடு புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ள இந்த பிரேரணை அடுத்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ளது.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் கடந்த ஒகஸ்ட் 28ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கரமசிங்க வால் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் கடந்த 4ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அது அங்கீகரிக் கப்பட்டது. (05)

# கடந்த வருடம் 957 வைத்தியர்கள் சேவையில் இருந்து விலகினர்

கடந்த ஒரு வருட காலப்பகுதியில் 957 வைத்தியர்கள் சேவையில் இருந்து விலகிச் சென்றுள்ளனர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த ஒரு வருட காலப்பகுதியில் 957 வைத்தியர்கள் சேவையில் இருந்து விலகிச் சென்றுள்ளனர்.

இதில் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி 197 பேர் விலகிச்சென்றுள்ளனர். குறித்த 197 பேரிடம் பணம் வசூலிக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இதேவேளை 5 வருட விடுமுறையில் வெளிநாடு சென்றுள்ள 526 பேரும் இந்தக் குழுவில் உள்ளடங்குகின்றனர். அதுமட்டுமல்லாது இந்த வருடம் 71 வைத்தியர்கள் ஓய்வுபெற்றுள்ளனர்.

எனினும் எவ்வாறான பிரச்சினைகள் இருந்தாலும் அரசாங்கச் சுற்றறிக்கை மற்றும் நிறுவனக் குறியீடுகளின் பிரகாரம் அவர்களுக்கு விடுமுறை வழங்க வேண்டிய கட்டாயம் எமக்குக் காணப்படுகின்றது.

இதன் காரணமாக சுகாதார சேவையின்அன்றாடநடவடிக்கைகளில் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக அவசர சேவை மருத்துவர்கள் மற்றும் மயக்க மருந்து நிபுணர்களின் பற்றாக்குறை காணப்படுவதால் சில சிகிச்சை பிரிவுகளில் 24 மணிநேர சேவையை முன்னெடுப்பதில் பல சிக்கல் ஏற்பட்டுள்ளன. -இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (05)

# பொலிஸ் உத்தியோகத்தர் எனகூறி மாணிக்கக்கல் கொள்ளையிட்டவர் கட்டுகஸ்தோட்டையில் கைது!

பொலிஸ் உத்தியோகத்தர் என கூறி, மாணிக்கக்கல்லை கொள்ளையிட்ட சந்தேகத்தில் பிரதானநபரைகட்டுகஸ்தோட்டை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பக்கூனபிரதேசத்தைசேர்ந்த 47 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுகஸ்தோட்டைபிரதேசத்தில் கடந்த 17ஆம்திகதி சந்தேகநபர்மேலும் பலருடன் இணைந்து இந்தக் கொள்ளைக்கு திட்டமிட்டமை தெரிய வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொள்ளையிடப்பட்ட மாணிக்கக்கல் சுமார் 12 லட்சம் ரூபா பெறுமதியான நீல நிறமானது எனத் தெரிவிக்கப்படுகிறது.

தான் குறித்த மாணிக்கக்கல்லை வாங்க விரும்புவதாக கூறிய சந்தேக நபர் தொலைபேசியில் அழைப்பு விடுத்து, தனது சகா ஒருவருடன் காரில் சென்று மாணிக்கத்தை பரிசோதித்துக் கொண்டிருந்தார்.

அப்போது, மோட்டார் சைக்கிளில் பொலிஸ் அதிகாரி போல் வேடமணிந்து வந்த மற்றொருசந்தேகநபர், மாணிக்கக்கல் உரிமையாளரை பயமுறுத்தி விட்டு கொள்ளையிட்டுச் சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# தற்கொலை தடுப்புத் தின விழிப்புணர்வு வீதி நாடகம்






(வி.ரி.சகாதேவராஜா)

உலக தற்கொலை தடுப்பு தினத்தினை முன்னிட்டு கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் வீதி நாடகம் மற்றும் வீதி ஊர்வலம் வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் இரா முரளீஸ்வரன் அவர்களின் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் வைத்தியசாலையின் மனநல வைத்திய நிபுணர் ஏ.ஜி.எம்.ஜூராச், வைத்தியசாலையின்பிரதிப்பணிப்பாளர்மருத்துவர்ஜே.மதன் மற்றும் வைத்தியசாலையின் சிரேஷ்ட வைத்திய அதிகாரிகள் வைத்தியசாலையின் கணக்காளர் தாதிய பரிபாலகர் நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் வைத்தியசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தனர்.

தொடர்ந்து வைத்தியசாலையின் பணிப்பாளர் தற்கொலை தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு உரை நிழக்த்தினார். மேலும் மனநல வைத்திய நிபுணரின் விழிப்புணர்வு உரை இடம்பெற்றது. தொடர்ந்து மனநல பிரிவின் சிரேஷ்ட வைத்தியர் மருத்துவர் யு.எல்.சராப்டீனின் விழிப்புணர்வு உரை இடம்பெற்றது. தொடர்ந்து வீதி ஊர்வலம் தொடங்கியது. இந்த ஊர்வலமானது கல்முனை பிரதான வீதியூடாகச் சென்று கல்முனை பேரூந்து நிலையத்தில் வீதி நாடகம் நிகழ்த்தப்பட்டது.

வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் ஊழியர்களான வி.குலோந்திரகுமார், திருமதி ரி.பாஸ்கரதாஸ், ஆர்.ஜெயானி, எஸ்.தேவகுமார், ஜெயந்தினி, எஸ்.ஸ்ரீதரன் ஆகியோரால் இந்த வீதி நாடகம் ஆற்றுகை செய்யப்பட்டது. மனச்சோர்வு ஏற்படும்சந்தர்ப்பங்களில் தொடர்புகொள்ளவேண்டிய வைத்தியசாலையின் தொடர்பு இலக்கம் 1926 என்ற விழிப்புணர்வை நாடகம் ஊட்டியது. கூடிய நாடகத்தினைத் தொடர்ந்து ஊர்வலம் கல்முனை பொலிஸ் வீதி வழியாக வைத்தியசாலையை அடைந்தது.

# ரணில் விரைவில் விரட்டப்படுவார்

## சந்திரசேகரன் சவால்

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்கள் ஆணையைப் பெற்றுக் கொள்ளாமல் நாட்டையும் நாட்டு மக்களை ஏமாற்றும் செயற்பாடுகளையே முன்னெடுத்துள்ளார் என மக்கள் விடுதலை முன்னணியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் குற்றம் சுமத்தியுள்ளார். யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் நிச்சயமாக இவர் தோல்வியை சந்திப்பார் எனவும் மக்களை ஏமாற்றும் செயற்பாடுகளுக்கு மக்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தோல்வியை சந்திக்கும் அச்சத்திலேயே தேர்தலை பிற்போடும்செயற்பாடுகளைஜனாதிபதிமுன்னெடுத்துள்ளார் எனவும் மக்கள் விடுதலை முன்னணியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# ஆடை தொழிற்சாலை விடுதியில்

# போதைப்பொருள் பொதி செய்த சுக்கா உள்ளிட்ட நால்வர் கைது

ஹோமாகம, நியந்தகல பிரதேசத்தில் உள்ள ஆடைத் தொழிற்சாலையொன்றில் உள்ள தங்கும் விடுதியில் ஐஸ் போதைப்பொருளை பொதி செய்துகொண்டிருந்த நால்வர் இன்று (24)ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளர் என ஹோமாகமதலைமையகபொலிஸார் தெரிவித்தனர்.

டுபாயில் இருந்து இலங்கையின் பாதாள உலக செயற்பாடுகளை நடத்தி வருவதாக கூறப்படும் 'ஹந்தயா'வின் மைத்துனர் என கூறப்படும் 'சுக்கா' என்ற நபர் உட்பட ஐவர் கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடமிருந்து 110,000 ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

தங்கும் விடுதியில் தராசுகள், பொலித்தீன் பக்கெற்கள், மெழுகு விளக்குகள், கத்தரிக்கோல் மற்றும் போதைப்பொருள்களை பொதி செய்வதற்கு பயன்படுத்தப்படும் பல பொருள்களும் கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபர்கள் ஹோமாகம நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர். (05)

# வைத்தியசாலையில் திருடிய துப்புரவு பரிசோதகர் கைது

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு மற்றும் கிளினிக்குகளை உள்ளடக்கிய, சீன அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட புதிய அடுக்குமாடி கட்டடத்தில்பல்வேறுஉபகரணங்களை திருடியகுற்றச்சாட்டில்தனியார்துப்புரவு நிறுவனம் ஒன்றின் பரிசோதகர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார் என வைத்தியசாலையின் பாதுகாப்பு பிரிவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மருதானை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டநபரைநீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

சிசிரிவி கமராக்களில் பதிவாகிய காட்சிகளின் அடிப்படையிலான விசாரணையின்போது உரிய நபரை அடையாளம் காண முடிந்ததாகவும் வைத்தியசாலையின் பாதுகாப்பு பிரிவினர் தெரிவித்தனர். (05)

# பங்கு பணிமனை திறப்பு









*கிளிநொச்சி மாவட்டத்தின் தருமபுரம் பகுதியில் அமைந்துள்ள சவேரியார் ஆலயத்தின் பங்குப் பணிமனை புகுவிழா நேற்று யாழ். மறை மாவட்ட ஆயர் ஐஸ்டின் பேனாட் கரங்களினால் சம்பிரதாயபூர்வ மாக இடம் பெற்றது. இந்நிகழ்வில் ஆலய பங்குத்தந்தை நிக்சன் கொலிச் மற்றும் அயல் தேவாலய பங்குத்தந்தைகள் மற்றும் வட மாகானசபை முன்னால் கல்வி அமச்சர், உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (113)*




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.09.2023இல் வெளியிடப்பெற்றது.